# சங்கமயுகம்

மலர்: 29 ஏப்ரல்-மே 2015 இதழ்: 1

இருமாத இதழ்: ரூ. 8.00

## ஸ்ரீலக்ஷ்மி, ஸ்ரீதுர்கை, ஸ்ரீசரஸ்வதி யாரோ



## அவரே உலகமாதா ஜெகதம்பா



**சென்னை:** வருடாந்திர கணக்கு வழக்கு சரி பார்க்கும் சேவைக்காக மதுபனிலிருந்து வந்திருந்த சகோதரர் பி.கு. லலித் மற்றும் சகோதர சகோதரிகள்



**சென்னை:** வருடாந்திர கணக்கு வழக்கு சரி பார்க்கும் நிகழ்ச்சிக்கு வந்திருந்த சகோதர சகோதரிகளுடன் உரையாடுகின்றார் பி.கு. லலித்




**சென்னை:** ஹேப்பி வில்லேஜில் பி.கு. இளைஞர்களுக்கான சிறப்பு நிகழ்ச்சியில் Tamilnadu BK Youth Forum னை துவக்கி வைப்பவர்கள்: பி.கு. கலாவதி, பி.கு. பீனா, பி.கு. தேவி, பி.கு. ரஞ்சனி மற்றும் மூத்த சகோதரர்கள்



**சென்னை:** பி.கு. இளைஞர்களுக்கான சிறப்பு நிகழ்ச்சியில் பங்கேற்ற பிரம்மா குமார் - குமாரிகள்



**சென்னை:** ஹேப்பி வில்லேஜில் நடைபெற்ற வருடாந்திர சேவை கூட்ட துவக்கவிழாவில் குத்து விளக்கு ஏற்றுபவர்கள் மூத்த சகோதரிகள்



**சென்னை:** வருடாந்திர கூட்டத்திற்கு வருகை தந்திருந்த சகோதர சகோதரிகள்




**கரூர்:** உலக மகளிர் தினத்தையொட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்ச்சியில் உரையாற்றுபவர் பி.கு. சாரதா உடன் Dr. விஜயா புஷ்பா, திருமதி மீனா, திருமதி பத்மாவதி



**கரூர்:** நிகழ்ச்சியில் கலந்து கொண்ட மகளிர்

தலையங்கம்

# ஸ்ரீ சரஸ்வதி, ஸ்ரீ லக்ஷிமி ஸ்ரீதுர்கை யாரோ அவரே! உலக மாதா ஜெகதம்பா

பாரதத்தின் தொன்மையான கலாச்சாரத்தை நினைவூட்டிக் கொண்டிருக்கும் சான்றுகள் பல உண்டு. இதில் கற்பனை நயத்தோடு படைக்கப் பட்ட காவியங்களும் அடங்கும், இவை இன்றைக்கும் கூட மக்களின் மனதில் அழியாமல் இடம் பெற்றிருக்கின்றதென்றால், இவற்றிற்கு உண்மையான வாழ்க்கை வரலாறோடு சம்மந்தமுள்ள ஆழமான இரகசியம் அடங்கியிருக்கலாம்.

உதாரணத்திற்கு பல இருந்தாலும், இங்கு ஒன்றை மட்டும் சிறிது நினைவு கூர்ந்து பார்க்கலாம், மகாபாரத கதாநாயகியான திரௌபதி யக்ஞ குண்டத்தில் பிறந்தாள் என்று சித்தரிக்கப் பட்டுள்ளது. இதன் காரணமாக திரௌபதிக்கு யக்ஞ சேனி என்ற பெயரும் உண்டு. இது உண்மைதானா? அல்லது கற்பனையா என்ற கேள்வி மனதில் எழுவது இயல்பு. ஒரு இளம் பெண் யக்ஞ குண்டத்தில் பிறக்க முடியுமா? இப்படி உண்மையாக நடந்திருக்குமா ? அல்லது இதில் ஏதாவது இரகசியம் அடங்கி உள்ளதா? என்பது தான். பொதுவாக தெய்வீக சக்தியில் அளவற்ற நம்பிக்கையுடையவர்கள் இது சாத்தியமே என்று நம்பிவிடுவர் என்றாலும் இது எல்லோருக்கும் ஏற்புடையதாக இருக்காது. ஆதலால் அதர்மம் நிறைந்து விட்ட இன்றைய கலியுகத்தின் இறுதியான இந்த வேளையில் பல விதமான துன்பங்களை சகித்துக் கொண்டு வாழ்ந்து கொண்டிருக்கும் மக்கள் சமுதாயத் திற்கிடையே ஒரு மகத்தான காரியம் நடந்து கொண்டிருக்கிறது என்பதை உன்னிப்பாகக் கவனிப்பது அவசியமாகிறது.

**பகவான் வாக்கு :** அதர்மம் உச்ச நிலையை

## சங்கமயுகம்


## பொருளடக்கம்

மலர்: 29 ஏப்ரல்-மே 2015-16 இதழ்: 1


| | | |
|---|---|---|
| 1. | தலையங்கம் | 01 |
| 2. | பகவான் வாக்கு | 05 |
| 3. | சுட்டி - படு சுட்டி | 06 |
| 4. | பகவான் ஒவ்வொரு யுகத்திலும்.... | 09 |
| 5. | மனித ஆத்மாவும் உலக நாடகமும் | 11 |
| 6. | தோல்வியிலும் வெற்றி | 18 |
| 7. | டிரஸ்டி நிலை | 22 |
| 8. | வீண் சிந்தனை | 24 |
| 9. | எதிர்பார்ப்பு | 26 |
| 10. | சகோ. பி.கு. இரமேஷ்ஜி கடிதம் | 28 |
| 11. | உலக யோக நாள் | 29 |


இந்த இதழில் வெளியாகும் ஆன்மீகக் கருத்துக்கள் கலியுகத்தின் இறுதியான இன்றைய புருஷோத்தம சங்கமயுகத்தில் அனைவருக்கும் ஆன்மீகத் தந்தையாக விளங்குகின்ற பரமபிதா பரமாத்மா, பிரஜாபிதா பிரம்மா மூலமாக இப்பூவுலகில் மீண்டும் தர்மத்தை ஸ்தாபனம் செய்வதற்காக அருளிச் செய்த மகாவாக்கியத்திலிருந்து தொகுத்து வழங்கப்பட்டவையாகும். ஆசிரியர்

**“தூய்மையே சங்கமயுகத்தின் ஆஸ்தி”**



அடையும்போதெல்லாம் தர்மத்தை நிலை நாட்டுவதற்கு அவதாரம் செய்கிறேன் என்பதாக இருக்கிறது. ஆனால், பகவான் எங்கே, எப்படி அவதாரம் செய்கிறார் என்பது ஆழமான இரகசிய மாகவும் இருக்கிறது. இந்த நேரத்தில் இதனைப் புரிந்து கொள்வது கடினமானதல்ல என்றாலும் இப்படிச் சொல்வதும் கூட சரியானதாக இருக்காது என்பது தான் உண்மை நிலை. மேலும் அதர்மம் எவ்வாறு அழிக்கப்படுகிறது என்பது மிகவும் முக்கியமான விசயமாக இருக்கின்றது. பகவான் தனது அவதாரத்தின் போது ஞான வேள்வியைப் படைக்கின்றார். இதில் ஞானமும் தவமும் அடங்கும். ஞான ஆதாரத்திலான தவ வலிமையின் மூலம், ஒவ்வொரு ஜீவாத்மாவும், தன்னிடமுள்ள தர்மத்திற்குப் புறம்பான, தனக்குச் சொந்தமில்லாத, அசுர குணங்களை அழிக்க வேண்டும் என்பது அடிப்படையான விசயம். இதன் மூலமாகவே தர்மம் தளைக்கும், துன்பம் மறையும், சுகம் பெருகும். நாட்டில் வளம் கொழிக்கும். இன்றைய உலகம் புத்தம் புதிய உலகமாக பரிணமிக்கும்.

இவ்வாறு பகவான் படைத்த வேள்வியில், தங்களிடமுள்ள அசுர குணங்களை அர்ப்பணித்து விட்டு, தெய்வீக குணங்களை வாழ்க்கையில் கடைப்பிடித்து வாழ்வது என உறுதிமொழி எடுத்துக் கொண்டு வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் பல லட்சம் பேர், இவர்களில் இளம் பெண் ஒருவரும் இருந்தார். அவரது இயற்பெயர் ராதை. வயது பதினேழு. அந்த ஆண்டு 1936. அன்றைய சிந்து மாகாணத் திலுள்ள ஹைதராபாத்தில், இப்பெண் ராதை, எல்லாம் வல்ல இறைவனுடைய திட்டத்தை ஆரம்பம் முதலே மிகச் சரியாகப் புரிந்து கொண்டு விட்டார் என்றே கூற வேண்டும், இறைவன் அளிக்கின்ற ஞானத்தைச் சிந்தித்து, ஆழமாகப் புரிந்து, தெய்வீக நியமங்களை நேர்மையோடு நடை முறையில் இயல்பாகவே கொண்டு வந்துவிட்டார் இவ்வாறாக, இந்த வேள்வியில் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட பிறகு பின்னோக்கிப் பார்க்கவே இல்லை. இவருடைய நடத்தையும், அணுகுமுறையும், மறுமலர்ச்சியும், முன்னேற்ற மும், புத்திக் கூர்மையும், இவர் ஒரு சாதாரண பெண் அல்ல என்பதைக் காட்டுவதாக இருந்தது, வெகு விரைவிலேயே இவர், தன்னைப் போலவே அர்ப்பணித்துக் கொண்டிருந்த பல பெண்களுக்கு ஒரு வழிகாட்டியாகவும், பாதுகாப் பாளராகவும் அறிமுகமாகிவிட்டார். ஆகையால், இப்போது இவரது பெயர் ராதை என்பதற்குப் பதிலாக ஓம் ராதை என்பதாக ஆகிவிட்டது.

இறைவன் படைத்த இந்த வேள்விக்கு ஸ்தூலமான கருவியாக இருந்தவர் பிரஜா பிதா பிரம்மா என இறைவனால் அழைக்கப்பட்ட முதியவர் இவர். ஓம் ராதையினுடைய குணாதி சயங்களைக் கவனித்து வந்த இவர், இவ் வேள்வியின் முழுப் பொறுப்பையும் இவரிடமே ஒப்படைத்துவிட்டார். இதன் காரணமாக, ஓம் ராதை, அனைவராலும் மம்மா (தாய்) என அழைக்கப்பட்டார். தாய் என்றால், இரண்டு முக்கிய குணங்கள் இருக்கும். **ஒன்று. பொறுமை என்னும் சக்தி, அடுத்தது என்ன நடந்தாலும், எல்லாவற்றையும் தன்னுள் அடக்கிக் கொண்டு அனுசரித்துச் செல்லக்கூடிய சக்தி என்பதாகும்.** இவர் அனைவரிடமும் ஆக்க பூர்வ தன்மை யுடையவராகவும், அன்பும், அனுதாபமும், இரக்க மனப்பான்மை உள்ள வராகவும் இருந்தார், மம்மா, ஒழுக்கத்தின் உறைவிடமாகத் திகழ்ந்தார். இவர் இயல்பாகவே ஆத்ம உணர்விலும், பரமாத்மாவின் நினைவிலும் எப்போதும் இருந்தார் என்றே சொல்ல முடியும். இவ்வாறாக நினைவிலும் நடத்தையிலும், முன்னுதாரண மாகவே இருந்தார் என்றால் அது மிகையல்ல. இத்தனை குறுகிய காலத்திலேயே இவரிடம் காணப்பட்ட முன்னேற்றமும், தெய்வீக குணங்களும், சக்தியும், பேச்சிலும், நடை முறையிலும் பளிச்சிட்ட தன்மைகள், இவர் இடைவிடாத சூட்சுமமான முயற்சியிலேயே இருந்திருக்க வேண்டும் என்பதை மற்ற எல்லோருக்கும் நினைவுபடுத்துவதாக இருந்தது.

இவரது நடை முறை எளிமையானதாகவும், அதே சமயம் ராயலாகவும் இருந்தது. தேவதா லட்சணங்கள் இப்போதே வந்து குடிகொண்டு விட்டதோ, என்றே தோன்றியது.

இவர், இவ்வேள்வியில் மிக உயர்ந்த பொறுப்பிலிருந்தாலும் அடக்கமுள்ளவராகவும் இருந்தார் என்பது மெச்சத்தக்க சிறப்பு, இதன் காரணமாக, இவரால் பலவிதமான இயல்பு டையவர்களோடும், அனுசரித்து நடந்து கொள்ள முடிந்தது. இவர் எந்த ஒரு சூழ்நிலை யிலும், கோப வசப்படுவதோ, தர்க்கம் செய்வதோ, அமைதியிழந்து விடுவதோ, இல்லை. இவர் எப்போதும் சம நிலையிலும், எல்லோருடைய நன்மையை நாடுபவராகவே இருந்தார். ஆன்மீக முயற்சியில், பலவீனமாக இருந்தவர்களை அன்புடன் ஆறுதலுடன் நம்பிக்கையூட்டி வந்தார்.

நாளடைவில், யக்ஞத்தில் உள்ளோர் அனைவரும், மம்மாவை மாதேஸ்வரி என அழைத்தனர். இறைவன் பிரம்மா மூலமாகப் பிறப்பித்த ஒவ்வொரு கட்டளையையும், அறிவுரைகளையும், சிரமேற்கொண்டு நிறை வேற்றினார். இது இறைவனிடம் தான் கொண்டிருந்த அளவற்ற அன்பையும், மரியாதை யையும், நம்பிக்கையையும் காட்டுவதாக இருந்தது. ஒவ்வொரு நாளும் அமிருத வேளை தியானம் முடிந்ததும், பகவானுடைய அருள் வாக்கினை (முரளி) படித்து, புரிந்து, நினைவு கூர்ந்து ஆழமாகச் சிந்தித்து மனதில் பதிவு செய்வது வழக்கமாகக் கொண்டிருந்தார். இதன் காரணமாக வகுப்பில் அனுபவ பூர்வமாக மற்றவர்களுக்கு எளிதாகவும், இயல்பாகவும் பாடம் நடத்த இவரால் முடிந்தது, இவரது முகம் எப்போதும் மகிழ்ச்சி நிறைந்து, பிரகாசமாகக் காணப்படும். இவர் ஞானத்தில் தேர்ச்சியும், அறிவுக் கூர்மையும் உடையவராக இருந்த மையால், இவர் கல்விக் கரசியின் அடையாள மாக சரஸ்வதி என அழைக்கப்படலானார்.

பக்தி மார்க்கத்தில், சரஸ்வதி ஒரு இளம் பெண்ணாகவும், வெண்ணிற ஆடையும், கையில் வீணையும், அன்னப்பட்சி மீது அமர்ந்த நிலை யில், அருகில் மயிலும் இருக்கின்ற காட்சியை சித்தரித்துக் காட்டியிருக்கின்றார்கள். கல்விக் கரசியான சரஸ்வதி, மனம், சொல் செயலில் தூய்மையின் உறைவிடம் என்பதற்கு மயில் உதாரணமும், கற்களை ஒதுக்கிவிட்டு, ரத்தினங் களை மட்டுமே பொறுக்கும் அன்னப்பட்சி, அறிவாற்றலின் அடையாள மாகவும், வீணை, ஞானத்தின் மூலம் அனைவருக்கும் ஆனந்தத்தை அளிப்பதன் அடையாளமாகவும் காட்டியிருக்கின்றார்கள். சரஸ்வதியை, இளம் பெண்ணாகக் காட்டியிருப்பது இளம் வயதிலேயே தனது ஒப்பற்ற முயற்சியின் காரணமாக தெய்வீகப் பரிவர்த்தனையில் சம்பூரணம் அடைந்து விட்டார் என்பதைக் குறிப்பதாக இருக்கின்றது.

இவர் யக்ஞத்தின் தலைவியாகவும், சிறந்த நிர்வாகியாகவும் இருந்தும், மிகவும் குறைவாகவே பேசும் பழக்கமுடையவராக இருந்தார். பிறர் சொல்லுக்குச் செவி சாய்ப்பது அதிகம். ஆனால் பேசுவது குறைவு. தவ வலிமையில், இவர் பெற்ற அமைதி சக்தியானது எல்லோரிடமும் பிரபாவத்தை ஏற்படுத்துவதாக இருந்தது. தலைமைப் பொறுப்பிலிருந்தால், எத்தனையோ பேருடைய மனதை அறிந்தும், புரிந்து கொண்டும், உகந்த முறையில் நடந்து கொள்ள வேண்டியது அவசியம், அப்போதுதான் வெற்றி பெற முடியும். மாதேஸ்வரியிடம் இத்தகைய குணங்கள் இயல்பாகவே இருந்தமை யால், இவர் வெற்றித் திலகமாகவே இருந்தார்.

இவர் அடிக்கடி நினைவு கூறும் அறிவுரைகளில் சில :

1. கட்டளை இடுபவர், நடத்திக் கொண்டும் இருக்கின்றார்

2. மரியாதை கொடுத்தால், மரியாதை கிடைக்கும்

3. இறைவனிடம் எல்லா சம்மந்தங்

களையும் அனுபவம் செய்யுங்கள்.

4. ஒரு முறை செய்த தவறை மீண்டும் செய்யாதிருங்கள்

5. செய்த தவறை, ஒப்புக் கொள்ளாமலி ருப்பது, மிகப் பெரிய தவறு

எல்லோரையும் போலவே, ராதை என்று சாதாரணமாக அழைக்கப்பட்ட ஒரு இளம் பெண், ஓம் ராதையாக, எல்லோராலும் மம்மா என்றும், மாதேஸ்வரி என்றும், சரஸ்வதி என்று அழைக்கப்பட்டவராகவும், ஒரு மகத்தான பூஜைக்குரிய சக்தியாக, சிகரத்தின் உச்சியையே தொட்டுவிட்டார் என்றால், இறைவன் படைத்த வேள்வியில் பழைய பிறவிக் குணங்கள் அனைத்தையும், அர்ப்பணித்து அழித்துவிட்டு புதிய தெய்வீகப் பிறவி எடுத்தார் என்பதாகும். இப்பிறவியில் இவரது வாழ்க்கை வரலாற்றை நோக்கும் போது இவ்வேள்வியின் பால் ஏற்பட்ட பொறாமையின் காரணமாக நீதி மன்றத்தில் குற்றம் சாட்டப்பட்டதும், சத்தியத்திற்குப் புறம்பாக உறுதிமொழி எடுக்கும்படி வற்புறுத்தப்பட்டதும், பயமுறுத்தப்பட்டதும், கை விலங்கு பூட்டுவதற்கான முயற்சி நீதி மன்றத்தில் தோல்வியடைந்து, ஒரு மாசற்ற சக்தியாக, வெற்றியின் திருவுருவமாக, நீதி மன்றத்திலி ருந்து வெளியே வந்ததும், வெகு சமீப காலத்தில் பிரத்யக்ஷமாக நடந்த உண்மை நிகழ்வாகும்.

திரௌபதி யக்ஞ குண்டத்தில் பிறந்தார் என்று மகாபாரதக் காவியம் கூறுகின்றது. இந்தக் காவியத்தின் தலைவி யார்? திரௌபதி யார்? இவர் யக்ஞ குண்டத்தில் பிறந்தாரா? மகாபாரதம் மீண்டும் நடக்கும் யுத்த களத்தில் இருக்கின்ற நீங்களே முடிவு செய்யுங்கள்.

# குழந்தையும், தெய்வமும்



அபகாரம் செய்பவர்களுக்கும், உபகாரம் செய்ய முடியுமா? முடியும். ஆனால் எல்லோராலும் செய்ய முடியாது. ஏனெனில் தெய்வத்திற்குச் சமமான கருணை உள்ளம் வேண்டும். நினைவு கூறத்தக்கப் பத்திரிகைச் செய்தி ஒன்றை மீண்டும் நினைவு கூறுவோமாக. அந்தச் செய்தி இதுதான்: காலை நேரம் ஒரு சிறுமி, தும்பைப் பூவையொத்த வெள்ளை நிற உடை உடுத்தி, பள பளக்கும் காலணியையும் அணிந்து கொண்டு, ஒரு தட்டில் பூக்களை ஏந்தி, முகம் மலர, தன் வீட்டை விட்டு வெளியேறி தெருவில் நடந்து செல்கிறாள். தூரத்தில் குறும்புக்கார சிறுவன் ஒருவன் தெருவில் தேங்கிக் கிடந்த சேற்றை வாரி இறைத்தவாறே குதூகலமாக விளையாடிக் கொண்டிருந்தான். சிறுமியைப் பார்த்த சிறுவன் மண்ணை வாரி இறைப்பதை சற்று நிறுத்துகிறான். சிறுமி மீண்டும் நடக்க ஆரம்பிக்கிறாள். திடீரென்று சிறுவன் மண்ணை வாரி இறைக்கவே சேறு கலந்த மண், சிறுமியின் ஆடையிலும், கால்களிலும் படுகிறது. இதனை எதிர்பாராத சிறுமியின் முகம் வாடுகின்றது. கண்களில் நீர் மல்கியது. இதைச் சிறுவனும் கவனிக்கிறான். ஆனால் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. இவ்வளவில், அச்சிறுமியின் மனம் என்ன நினைத்ததோ, தன்னை சுதாரித்துக் கொண்டு, மலர்ந்த முகத்துடன் நடக்கின்றாள். அச்சிறுமி தன்னை நோக்கி வருவதை சிறுவன் பார்க்கின்றான். அச்சிறுமி சிறுவன் அருகில் வந்ததும், புன்னகைத்தவாறே தட்டிலிருந்த மலரை எடுத்து சிறுவனிடம் நீட்டுகிறாள். இதைச்சற்றும் எதிர்பாராத சிறுவன் வெட்கத்தால் கூனிக்குறுகி தயங்கியவாறே மலரைப் பெற்றுக் கொள்கிறான். அப்போது அந்தச் சிறுவனின் நிலை தனது செயலுக்கு வருந்தி மன்னிப்புக் கேட்பதாக இருந்தது. பின்னர் அச்சிறுவன் அங்கிருந்து நகர்ந்து சென்றுவிட்டான்.




இனிமையிலும் இனிமையான குழந்தைகளே ! எனதருமைச் செல்வங்களே !

நீங்கள் மிக உயர்ந்த நிலை அடைய வேண்டும் என்ற உயர்ந்த லட்சியத்தோடு, சம்பூரண நிலை அடையும் வழி நாடி வந்திருக்கின்றீர்கள். குழந்தைகளே! நீங்கள் என்னுடையவர்கள். ஆதலால், இது ஒன்றும் கடினமானதல்ல. உங்கள் புத்தியை எல்லா விசயங்களிலிருந்தும் பாதிக்கப்படாமல் வைத்திருங்கள். எல்லாமே விரைவில் அழியக்கூடியவைகளே என்பதை நீங்கள் அறிவீர்கள் இன்று உலகில் மூட நம்பிக்கைகள் அதிகமாக உள்ளது. கடவுள் யார்? என்பதைப் பற்றிக் குழப்பமுடையவர்களாக இருக்கின்றனர். என்றாலும், சத்தியமான கடவுள் ஒருவரே என்பதை உங்கள் மூலமாக அறிந்து கொள்வார்கள். இந்த அறிமுகம் நிச்சயமானவுடன் அனைவரும் ஓடிவருவார்கள். வேறு சிலர் காலம் கடந்து விட்டதையும் உணர்வார்கள். எங்கும் வினாசத்தின் அறிகுறிகள் தென்படும். யுத்தம் ஆரம்பித்து விடும். பகவானுடைய கருணை வேண்டும் என்ற ஆர்வம் எல்லோர் மனதிலும் உண்டாகும். இவ்வாறு நடக்கும். இவையனைத்தையும் நல்ல முறையில் புரிந்து கொள்வீர்களாக !

**அழியக்கூடிய கண்களால் அழியக்கூடிய வஸ்துகளை**
**மட்டுமே காண்பவன் அழிவையே அடைவான்**
**அழியாத கண்ணை கொண்டு அழியாதவற்றை**
**காண்பவன் என்றும் அழிவற்ற அமரனாகிறான்**

# சுட்டி, படுசுட்டி



**சுட்டி:** அண்ணே! வணக்கம்: வெளியூர் போனதாலே கொஞ்ச நாளா, உங்களைச் சந்திக்க முடியலே,

**படுசுட்டி:** அப்படியா தம்பி, உங்களைக் காணோமேங்கிறபோது ஊருக்குத்தான் போயிருப்பீங்கன்"னு" நெனைச்சேன். அப்போ, ஊர்லே எப்படி, எல்லோரும் சௌக்கியமாக இருக்காங்கதானே?

**சுட்டி:** ஆமாண்ணே, கடவுள் புண்ணியத்துலே, சௌக்கியமா இருக்காங்கண்ணே! உங்களைப் பார்த்தா, கொஞ்சம் இளைச்ச மாதிரி தெரியுதே?

**படுசுட்டி:** அதெல்லாம், ஒண்ணுமில்லே தம்பி. நான் நல்லாத்தான் இருக்கேன். அப்புறம் என்னசேதி சொல்லுங்கோ?

**சுட்டி:** அண்ணே ! கேட்க வேண்டாம் "னு" தான் நெனைக்கிறேன். இருந்தாலும், சந்திச்சப் புறம் கேட்கலாம் "னு" தோனுது

**படுசுட்டி:** எதுவா இருந்தா என்ன, சும்மா கேளுங்க தம்பி.

**சுட்டி:** அண்ணே! பகவான் இந்த உலகத்தை விளையாட்டு போல படைச்சார் "னு" சொல்றாங்க, எனக்கென்ன சந்தேகம் "னா" இந்த உலகம் இன்னிக்கு இவ்வளவு அமைதி இல்லாமே இருக்கே, இந்த மாதிரி உலகத்தை படைக் கிறதுலே, பகவானுக்கு அப்படி என்ன சந்தோஷம் இருக்கும்?

**படுசுட்டி :** தம்பி : அமைதி இல்லாத உலகத்தை கடவுள் படைச்சார் "னு" உங்களுக்குச் சொன்னது யாரு?

**சுட்டி:** நீங்க சொல்லலை தான். சந்தேகத்தைத் தான் கேட்டேன்.

படுசுட்டி : தம்பி. சாஸ்திரத்துலே கூட, சிருஷ்டி அநாதி "ன்னு" தான் சொல்லியிருக்காங்க. அதாவது இப்படி கடவுள் படைக்கலே, அப்படி இருக்குன்னு அர்த்தம். நாம என்ன கேள்விப் படறோம், அப்படின்னா, பகவான் உலகம் அமைதி இல்லாம துன்பம் நிறைஞ்சுதா ஆயிரும் போது, இதை மாத்தி, சுகம் நிறைந்த உலகமாக ஆக்கிடுறாரு. இப்படி பலமுறை, அதாவது எப்பெல்லாம் இப்படி அயிடுறதோ, அப்பல்லாம் நல்ல விதமா சரி பண்ணறாருன்னு சொல்றாங்க.

**சுட்டி:** ஏன் இப்படி உலகம் அப்பப்ப சரியில்லாம ஆயிறது.

**படுசுட்டி:** என்ன சொல்றாங்கன்னா, தம்பி, இங்கிருக்கிறவங்கெல்லாம் மனிதர்கள் தானே. நாளாக, நாளாக, மனிதர்களாகிய நாம் தான் அந்த மாதிரி அமைதி இல்லாமே பண்ணிடு றோம் "னு" சொல்றாங்க.

**சுட்டி :** அண்ணே, எனக்கும் கூட அப்படித்தான் இருக்கனும் "னு" தோணுது ஏன்னா, நாம கூட ஒரு பொருளை அழகாத்தானே செய்யுறோம். அதனாலே, பகவான் படைப்பு கூட நல்லாத்தானே இருக்கும்.

**படுசுட்டி:** இப்போ, புரிஞ்சிக்கிட்டீங்க தானே!

**சுட்டி:** இன்னொன்னு முக்கியமா, உங்க கிட்டே கேட்கனும்? அதாவது, பகவானை நினைவு செய்யறதுக்கு, பிரம்மச்சர்யத்தைக் கடைப் பிடிக்கனும் "னு" சொன்னீங்க ஆனா, பெரும் பாலும் கடவுளை நினைக்கிறவங்கெல்லாம், அப்படி இருக்கிறாப்போலே, தெரியலியே?

**படுசுட்டி:** தம்பி, கடவுள் நாமத்தை ஜெபிக்கிறதுக் கும், கடவுளோட, உண்மையான சம்மந்தம் வைக்கிறதுக்கும் வித்தியாசமிருக்குமில்லியா?

**சுட்டி:** அப்படின்னா, அவசியமா பிரம்மச்சர் யத்தைக் கடைப்பிடிச்சுத்தான் ஆகனும் கிறீங்க சரியா?

**படுசுட்டி:** ஆமா தம்பி. இதுலே சந்தேகமே இல்லே. வேனும்னா, நீங்க வேற விவரம் தெரிஞ்ச பண்டிதர் யார் கிட்டேயாவது கேட்டுப் பாருங்க தம்பி.

**சுட்டி:** அண்ணே மன்னிக்கனும் உங்கமேலே எனக்கு ஒன்னும் சந்தேகம் இல்லே. சம்மந்தம் னா எப்படி?

**படுசுட்டி:** தம்பி சம்மந்தம் ”னா” என்னென்னு.. உங்களுக்குத் தெரியும். கடவுள் பிறப்பு, இறப்புக்கு அப்பாற்பட்டவர். அதனாலே அவருக்கு சரீர மில்லே. நாம கூட அப்படித்தான்னு சொன்னாலும், நாடகப்படி நாம சரீரத்துலே வரத்தான் வேணும். அதனாலே நாம, மனசு, புத்தி மூலமா அவரை நினைக்கனும். இது சூட்சும சக்திகளா இருக்கு. பகவான் எவ்வளவு பரிசுத்தமானவரா, இருக்கிறாரு. நமக்கு அவரு சம்மந்தம் வேணும் ”னா” சுத்தமா இல்லேன்னா எப்படி?

**சுட்டி:** சரிதாண்ணே. நீங்க சொல்றது சரிதான். அண்ணே, குணம், ஒத்துப்போகலேன்னா, இரண்டு பேர் கூட ஒண்ணு சேர மாட்டாங்க.

**படு சுட்டி** : தம்பி கொஞ்சம் நினைச்சு பாருங்க. கடவுளுக்கு எல்லாமே தெரியும். சக்தியுமிருக்கு. ஆனா, எல்லா சொகமும் உங்களுக்குத்தான் னு நமக்குக் கொடுத்துட்டு, அவர் எப்பவும் வெலகியே தான் இருக்கிறார். இல்லியா?

**சுட்டி:** ஆமாண்ணே! நான் என்ன நினைக்கிறேன் ”னு” சொன்னா, அவர் இப்படி இருக்கிறதாலே தான், அவர் எப்பவும் ஒரே மாதிரியா குறையாத குணமும், சக்தியும் நிறைஞ்சவரா இருக்குறாரு. இந்த சக்திதான் நம்ம எல்லோரையும் கவர்ந் திழுக்குது. தெரிஞ்சாலும், தெரியா விட்டாலும், அவரையே நினைக்கவும் செய்யுறாங்க.

**படுசுட்டி :** ஆமா தம்பி. நல்ல புரிஞ்சிருக்கிறீங்க. சம்மந்தம் ”னு” சொன்னா, அனுபவம் மனம், புத்தி..... சுத்தமா இல்லேன்னா அனுபவம் ஆகாது. அதுனாலேதான் பிரம்மச்சர்யம் அவசியம் னு சொல்றாங்க.

**சுட்டி:** சரிதான் ஆனா, படைப்புலே ஆண், பெண் என்ற இரு ஜாதி இருக்காங்க. அப்படியிருக்க, பிரம்மச்சர்யம் விரோதமாப் படுதுல்லியா?

**படுசுட்டி:** தம்பி. உங்க சந்தேகம் புரியுது அதாவது படைப்பைப் பற்றி நமக்குப் புரிஞ்சது இவ்வளவு தான் தம்பி. நமக்கு எவ்வளவு தெரிஞ்சிருந்தாலும் அது அற்பமானது தான். பகவான் வாக்கு என்ன தெரியுமா? ஸ்ரீமத் பகவத் கீதை மூலமாகவும் என்னதெரிஞ்சு கிட்டோம். **காமம் மகா சத்ரு** இப்படித்தானே இருக்கு. நமக்குப் புரியலேன்னா, என்ன செய்ய முடியும்?

**சுட்டி:** அண்ணே. கொஞ்சம் வெளக்கமா சொலுங்களேன்.

**படுசுட்டி:** தம்பி. பகவான் வாக்கு. இந்தக் கல்பத்துலே, பிறவிச் சக்கரத்துலே இந்த கடைசிப் பிறவியிலே, கடைசி நேரம் அதனாலே, ஆண், பெண், இருபாலரும் ஒருவருக்கொருவர் உதவியாக இருந்து, தூய்மையாக வாழ்ந்து, உலகம் சொர்க்கமாக ஆவதற்கு, யோகதானம் செய்யுங்கன்னு சொல்றாரு.

**சுட்டி:** அண்ணே நீங்க சொல்லுங்க இது சாத்தியமானதா?

**படுசுட்டி:** தம்பி, நாம சொல்றதாயிருந்தா, சாத்தியமில்லை ”னு” சொல்லிடலாம். ஆனால், சொல்றது யாரு? அவர் என்ன சொல்றார் ”னா” உங்களுடைய ஆதி சொரூபம் தூய்மையானது. பூர்வீகமும் தூய்மையானது. பிற்பட்ட காலத்தில் தூய்மையை இழந்து விட்டீர்கள். இப்போது நாடகப்படி மீண்டும் தூய்மையாக வேண்டிய நேரம் ”னு” சொல்றார்.

**சுட்டி:** அண்ணே ! பகவான் சொல்றார். அதனாலே நாம் கேட்டு நடக்கத்தான் வேணும் ஆனா, ரிஷி, முனிங்களெல்லாம் கூட முடியாமத்தானே வனவாசம் போயிட்டாங்க.

**படுசுட்டி:** தம்பி, எல்லாத்துக்கும் மனசுதான் காரணம். பாருங்க தம்பி. நம்ம வீடுகள்ளேயும் கூடப் பிறந்த பெண்கள் இருக்காங்க நாம சகோதர பாவனையோட பழகிறதில்லையா? இது

மட்டும் எப்படி சாத்தியமாகுது. நம்ம புத்தியிலே, இவுங்க நம்ம சகோதரிங்க. அப்படின்"னு". அதுனாலே, பகவான் இப்போ எதுக்காக இப்படி சொல்றார் "னு" கொஞ்சம் சிந்திச்சுப் பார்க்கனுமா, இல்லையா? நமக்கு நல்லதுக்குத்தான் பகவான் இப்படிச் சொல்றாருங்கிறது மனசுலே படனுமா, இல்லையா ? பாருங்க தம்பி, பகவான் பேர்லே, நம்பிக்கையும், மனசுலே உறுதியும் இருந்தா, இது ஒண்ணும் பெரிய விசயமே இல்லே.

**படுசுட்டி** : தம்பி பகவான் திரும்பவும் இப்போ வந்து நம்ம பூர்வீகம், நம்ம சரித்திரம், பூகோளம் இதெல்லாம் எப்படி இருந்தது **ங்கிற** உண்மையை நினைவு படுத்துறாரு. அப்பக் கூட, நாம அசட்டையா இருந்தா ............

**சுட்டி:** சரிதாண்ணே நமக்கு நாளைக்கு என்ன நடக்கும் "னு" தெரியாது அதனாலே, பகவான் நம்ம நன்மைக்காகத்தான் சொல்றாருங்கிறதை புரிஞ்சு நடக்கிறது தான் நல்லதுன்னு படுது.

**படுசுட்டி:** ஆமா தம்பி. அப்படித்தான் நடக்கணும்.

## சிந்தனைக்கு:

இத்தருணத்தில் நமக்கு மிகவும் சம்மந்தமுள்ள ஒரு சில நம்பிக்கைகள் அல்லது பாவனைகள் அவசியமானதாக இருக்கிறது. பாவனையாக அல்லாமல் பாரபட்சமின்றி சிந்தித்து, யதார்த்தமாகவே அறிந்து, புரிந்து நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டிய நிலையில் இருக்கின்றோம். ஏனெனில் கீதையின் நாயகன் மீண்டும் இப்போது ஈஸ்வரிய ஞானத்தையும், யோகத்தின் அவசியம் பற்றியும் உபதேசம் செய்திருக்கின்றார்.

1. இன்று நாமறியும் மகாபாரதக் காவியமும், ஸ்ரீமத் பகவத் கீதையும், ஆதியில் உபதேசிக்கப்பட்ட அதே யதார்த்த நிலையில் உள்ளதா? அல்லது பின் சேர்க்கையுடன் கூடியதாக உள்ளதா? பகவான் உபதேசித்த காலத்திற்கும், இது எழுத்து வடிவம் பெற்ற காலத்திற்கும் இடைவெளி அதிகம் உள்ளதா?

2. கீதை ஞானம் யுத்த மைதானத்தில் தன் எதிரே போரிடுவதற்காக நின்று கொண்டிருக்கின்ற சுற்றத்தார், ஆச்சாரியார்கள் மீதுள்ள பாசத்தை விலக்கி, சுத்த வீரனாக, தர்மம் காத்திட போரிட வேண்டியதன் நியாயத்தை உணர்த்த, பகவான் அர்ஜுனன் ஒருவனுக்கு மட்டும் தான் உபதேசித்தாரா? ஜீவாத்மாக்களாக வாழ்ந்து கொண்டிருக்கும் பலகோடி ஆத்மாக்களுக்காகவா?

3. கீதை ஞானம் குரு க்ஷேத்திரத்திர மைதானத்தில் அளிக்கப்பட்டது என்று ஒரு சாரார் நம்புகின்றனர். வேறு சிலர் மனம் என்னும் குருக்ஷேத்திரத்தில் காமம், கோபம் எனும் மனோ விகாரங்கள் மீது வெற்றியடைவதற்கான உபதேசமே கீதை ஞானம் என்கின்றனர். ஆதலால் ஸ்ரீமத் (பகவான் காட்டும் வழி) அதாவது பகவான் அருளியது என்பதைக் குறிப்பது புருஷோத்தமன் ஸ்ரீ கிருஷ்ணரையா? அல்லது அசரீரியாக, ஆகர்ஷண மூர்த்தியாக விளங்கும் ஜோதி சொரூப நிராகார் சிவபரமாத்மாவையா?

4. கீதை ஞானம் துவாபரயுகத்தின் இறுதியில் அளிக்கப்பட்டது என்ற நம்பிக்கை உள்ளது. அப்படியானால், துவாபரயுகத்தை அடுத்து கலியுகம் பிறந்தது இதனை யடுத்து வரும் யுகம் சத்யுகம் என்பதாக உள்ளது. ஆதலால் கீதை ஞானம் அருளியது துவாபரயுகத்தின் இறுதியிலா அல்லது கலியுகத்தின் இறுதியிலா? எது சரியானது?

5. கீதையின் நாயகன் அருளியது. தூய்மையாயிரு. யோகியாயிரு. கலியுகம் சென்று கொண்டிருக்கிறது. சத்யுகம் வந்து கொண்டிருக்கிறது. பரமபிதா பரமாத்மாவாகிய என்னிடமிருந்து சம்பூரணத் தூய்மை, சம்பூரண சுகம், சம்பூரண சாந்தியை பரம்பரையாக வரும் ஜன்ம சித்த அதிகாரத்தை (பிறப்புரிமையை) இப்போது மீண்டும் அடையப் பெறுவீர்களாக என்பதாகும்.




# பகவான் ஒவ்வொரு யுகத்திலும் அவதாரம் எடுக்கின்றாரா?

பகவான் பல அவதாரங்கள் எடுக்கின்றார் என்று புராணக்கதைகள் மூலமாக மக்களிடையே நம்பிக்கை பரவலாக உள்ளது. காலச்சக்கரத்தைப் பற்றியும். அதில் கூறப்பட்டுள்ள நான்கு யுகங்களின் மனித வரலாற்றையும் அறிந்து கொண்டால், சில உண்மைகள் தெரிய வரும்.

காலச் சக்கரத்தின் முதல் பாதியான இரு யுகங்கள். சத்யுகம் மற்றும் திரேதாயுகம் என்பதாகும். இதன் வரலாறைப் பற்றி அறியும் போது, சூரிய வம்சம், மற்றும் சந்திர வம்சம் என்றும், தேவதைகள் என்னும் தர்மத்தில் தலை சிறந்து விளங்கும் யுகங்கள் என்பதாக இருக்கின்றது. ஆதலால் இக்காலத்தில் பகவான் அவதாரம் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. திரேதா யுகத்தையடுத்து வரும் துவாபரயுகம் மற்றும் கலியுகத்தின் முக்கால் பகுதிவரையிலும் கூட பகவான் அவதாரத்திற்கு அவசியமான அளவு அதர்மம் உச்ச கட்டத்தை அடையவில்லை. மேலும் இதற்கு வேறு சில காரணங்களும் உண்டு. அவை கீழே கொடுக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் பகவான் அவதரிப்பதற்கு அவசிய மான காலம் கலி யுகத்தின் இறுதியான நேரமே யாகும் என்பது தெளிவாகிறது. அப்படியானால் இக்காலத்தின் நிலை என்ன என்பதை அனுபவம் செய்து கொண்டிருந்தாலும் என்ன வென்று பார்ப்போம்.

1. சத்திய ஞானமும், தவ வலிமையும் மறைந்து, காமம், கோபம், மோகம், லோபம் அகங்காரம் எனும் அசுர சக்திகளின் அதிகாரம் கலியுகத்தின் இறுதியில் தான் உச்சநிலை அடைகிறது.

2. கலியுகத்தை அடுத்து சத்யுகம் ஆரம்பமாக இருப்பதாலும் அந்த யுகத்தில் வரும் ஆத்மாவானது சரீரத்திலிருந்தாலும் சரீரம் மற்றும் அதன் மூலமாகச் செய்த கர்ம பந்தனங்கள் இருப்பதில்லை. சம்பூரண சுதந்திரம் சம்பூண சுகம் மற்றும் சம்பூரண சாந்தி அனுபவ நிலையில் அதாவது ஜீவன் முக்தி நிலையில் புண்ணிய ஆத்மாவாகவும் இருக்கும். ஆதலால் அத்தகைய புதிய மனிதன் புதிய சமுதாயம், புதிய உலகம் மலர, இந்த யுகத்திலேயே இந்த சமயத்திலேயே எல்லா தீமைகளும், தீமை களுக்குக் காரணமான அனைத்தும் அழிக்கப்பட வேண்டும்.

3. கலியுகத்தின் இறுதி தவிர பிற யுகங்களில் எல்லா ஆத்மாக்களும், நிராகார உலகமான பரந்தாமத்திலிருந்து அதாவது மேலிருந்து, கீழே இறங்கி வராததும், அஞ்ஞான இருள் முழுமையாக சூழ்ந்து விடாததும், தீமைகளும், பாவ காரியங்களும் உச்ச நிலை அடையாமல் இருப்பதும் பகவான் அவதாரத்தை அவசியப்படுத்தும் சூழ்நிலை கலியுக இறுதியில் தான் உருவாகிறது என்பதாகும்.

4. பிரபஞ்சம் பற்றிய முழு ஞானமும் பகவான் ஒருவர் மட்டுமே அறிந்தவராயிருக் கின்றார். கலியுகம் முடிவு என்பது கல்பத்தின் முடிவான நேரம். இதனையடுத்து அடுத்த கல்பம் ஆரம்பமாகவிருப்பதால், இதற்கு முன்பாகவே, எல்லா ஆத்மாக்களும் கீழிறங்கி வந்தேயாக வேண்டும் என்பதாக உள்ளது. ஏனெனில் ஒவ்வொரு ஆத்மாவும், அடுத்த கல்பத்திற்குச் செல்வதற்குரிய விடுதலையையும் முக்தி, ஜீவன் முக்தி எனும் ஆஸ்தியையும் பரமாத்ம தந்தையிடமிருந்து அதாவது பகவான் அவதாரத்தின் போது தான் பெற முடியும்.

5. இச்சமயத்தில் தான் பகவான் ஜீவாத்மாக் களாகிய மனிதனுக்கு அறிவுறுத்துகின்றார். நீங்கள் சார்ந்திருக்கும் எல்லா தர்மங்களையும், கடைப்பிடித்து வரும் எல்லா சடங்குகளையும், ஜெப தவங்களையும் விட்டு, என்னையே நினைவு செய்து முக்தி, ஜீவன் முக்தி அடையுங்கள் என்பதாகும்.

இதன் மூலம் பகவானுடைய அவதாரம் அநேக முறைகள் அல்ல என்பதும், இதற்கு அவசியமில்லை என்பதும் புலனாகிறது. இரவு, பகல் என்று தொடர்ச்சியாக, மாறி, மாறி நிகழ்ந்து கொண்டிருக்கின்ற இந்த சாசுவதமான உலகில், இதன் வரலாறு எப்பொழுது ஆரம்ப மானது என்பது புதிராகவே தான் உள்ளது.

கல்பத்தின் ஆரம்பத்தில் எல்லா சுகங்களையும் அனுபவித்து வாழ்ந்து கொண்டிருந்த ஆத்மாக்களின் சதோபிரதான, பொற்கால வாழ்வு முடிந்து, துன்பம் நிறைந்த தமோபிரதான கலியுகத்தை ஆத்மாக்கள் அடைகின்றன. இந்நிலையிலிருந்து, ஆத்மாக் களை விடுவித்து, மீண்டும் சுகமான பொற்கால வாழ்வுக்கு அருகதையுள்ளவர்களாக, புனித மாக்கவல்ல பகவானுடைய வருகை இன்றியமையாத காலம், கலியுகத்தில் இறுதி யான நேரம் தான் என்பது தெளிவாகிறது.

ஆதலால் ஒவ்வொரு யுகத்திலும் என்பது கலியுக இறுதிக்கும் அடுத்து வரக்கூடிய சத்யுக ஆரம்பத்திற்கும் இடைப்பட்ட குறுகிய காலமாகிய சங்கமயுகமே பகவான் அவதரிக்கும் காலமாகும். தமோபிரதான நிலையிலிருந்து சதோபிரதான நிலையுடைய வராக ஆவதற்கு அவசியமான இடைப்பட்ட காலம் (மாறுவதற்கான காலம் - TRANSITION எனலாம். மேலும் ஆத்மாக்களும், பரமாத்மா வாகிய பகவானும் சந்திக்கும் காலம், சங்கமயுகம் எனவும் கூறலாம்.

இப்போது நாம் கலியுகத்தின் இறுதியான அதர்மம், உச்ச நிலையடைந்து விட்ட காலத்தில் இருக்கிறோம், ஏறக்குறைய எல்லா ஆத்மாக்களும் மேலிருந்து, கீழிறங்கி வந்துவிட்ட மையால், ஜனத்தொகை பெருகிவிட்டது பற்றாக் குறையும், சுய நலமும், பேராசையும், பயமும், வன் முறையும் ஒழுக்கத்தின் சீர்குலைவும் அதிகமாகி விட்டது. என்ன ஆயிற்று இன்றைய மனிதனுக்கு? நன்றாகத்தானே இருந்தான் ! புத்தி கெட்டுப் போய் விட்டதா & அல்லது பைத்தியம் பிடித்து விட்டதா? ஒன்றும் புரியவில்லை. ஆனால் அதர்மம் உச்சநிலை அடைந்து விட்டது என்பது நன்றாகவே புரிகிறது.

ஸ்ரீமத் பகவத் கீதை அறிவுறுத்தும் நேரம் இந்த நேரமேயாகும். பகவான் அர்ஜூனனுக்கு உபதேசிப்பதாக உள்ள வாசகம் இதுதான். ஹே, அர்ஜூனா ! இதற்கு முன்பும் இந்த சிருஷ்டியைப் புதுப்பித்து, புதியதாக படைக்கும் சமயத்தில் உனக்கு ஞானமும், யோகமும் கற்பித்தேன் என்பது இந்த சங்கமயுகத்தையே குறிப்பதாகும்.

இதன் மூலம், நாம் அறிவது, பரமாத்மா வாகிய பகவான் அசரீரி என்பதும், முடிவில்லாமல் தொடரும் 5000 ஆண்டுகள் அடங்கிய கல்ப கால நாடகத்தின் ஒவ்வொரு முடிவிலும், சங்கமயுகத்தில் ஒரு முதியவர் சரீரத்தை ஆதாரமாக எடுத்துக் கொண்டு, ஞானமும், யோகமும் கற்பித்து இப்பழைய உலக தீமைகளை அழித்து, சத்யுகம் எனும் புதிய பொற்காலம் ஆரம்பமாவதற்கான எல்லா காரியங்களையும், உதவிகளையும் பகவான் நமக்காகச் செய்கின்றார் என்பதை புரிந்து கொள்ள முடிகிறது.

இப்போது நாம் செய்ய வேண்டியது என்ன? நமக்குத் தீங்கு விளைவித்துக் கொண்டிருக்கின்ற, தீய குணங்களிலிருந்து விடுதலை பெறவேண்டும். புருஷோத்தமனாக ஆவதற்கான இந்த நேரத்தில் நமது சொந்தமான தெய்வீக குணங்களை நடைமுறையில் கொண்டு வர வேண்டும். இதுதான் உண்மை என்பதைப் புரிந்து கொண்டு நல்லதைக் கடைப்பிடிக்கும் துணிவுள்ளவர் யாரோ, அவர்களே அதிர்ஷ்டசாலிகள்.

# மனித ஆத்மாவும் சாசுவத உலக நாடகமும்



ஆத்மாவைப் பற்றியும், பரமாத்மாவாகிய இறைவனைப் பற்றியும், எல்லையற்ற உலக நாடகத்தைப்பற்றியும் இன்னும் சில புதிர்கள் ஆன்மீகத்தில் நம்பிக்கை உள்ளவர்களுக்கும் உண்டு. காரணம், சத்தியம் என்பது ஒன்று தான். ஆயினும், இதைப் பிரதிபலிப்பவர்கள் பலராகவும், பலவகையினராகவும் இருப்பது தான். இதில் முக்கியமாக ஆத்மாவைப் பற்றிய சந்தேகம் வலுவாக இருக்கின்றது. ஆத்மா, இறைவனிட மிருந்து சரிந்த ஒரு சிதறல் என்றும், மனதில், பிரம்மத்தின் பிரதி பிம்பம் என்றும், வேறு சிலர் ஆத்மா தனிப்பட்டது, தனித்தன்மையுடையது என்றும் கூறுகின்றனர். பரமாத்மாவாகிய இறைவனிடமிருந்து பிரிந்து வந்தது என்றால் காரணம் என்ன? தனித்தன்மையுடையது என்றால், பிரமிப்பூட்டும் இந்த உலக நாடக அரங்கிற்கு ஆத்மா ஏன் வரவேண்டும்? இந்த உலகம் முறையான திட்டத்தின்படி உருவானதா? அல்லது கட்டுப்பாடற்ற, தன்னிச்சையான ஒரு நிகழ்வா? இதைப்பற்றிய கருத்துக்களைப் பார்ப்போம்.

இன்றைய சங்கமயுகத்தில், ஜோதி பிந்து (சுடரொளி வீசும் ஒரு புள்ளி என்று பொருள்). சொரூபமாக விளங்கும் பரமாத்மாவின் மகாவாக்கியம். ஆத்மாக்கள் இந்த உலக நாடக அரங்கிற்குள் நுழைவதற்கு முன்பாக தங்கள் இருப்பிடமாகிய பிரம்ம தத்துவத்தில், தனித்தன்மைபடைத்ததாக, தனிப்பட்டவை களாகவே உள்ளன. இவைகள் ஒவ்வொன்றுக்கும், இந்த உலக நாடகத்தில் தனித்தனியான பங்கு உண்டு. இதற்காக, ஒவ்வொரு ஆத்மாவிலும், தான் ஆற்ற வேண்டிய பங்கு பற்றிய நாடகத்தின் அம்சங்கள் சம்ஸ்காரமாக பதிவாகியுள்ளன. இதனடிப்படையிலேயே ஆத்மாக்கள் அதனதன் நேரப்படி பூலோகத்திற்கு இறங்கி வருகின்றன. இவ்வாறு இறங்கி வருகின்ற ஆத்மாவுக்கு அதனதன் சரீரம் ஆதாரமாகக் கிடைக்கின்றது. பின்னர் கல்பத்தின் இறுதிவரை பல பிறவிகள் எடுத்து, எடுத்து தனது பாகத்தை நடித்து இவை துன்பங்களை அனுபவித்துக் கொண்டேயிருக் கின்றது. ஆத்மா சரீரத்தில் பிரவேசித்ததும், சரீரம் உயிருள்ள தென்பதும், ஆத்மா சரீரத்தை விட்டுப் பிரிந்ததும் சரீரம் உயிரற்றதென்பதும் கண்கூடு. இதன் மூலம் சரீரம் அழியக்கூடியது என்பதும், ஆத்மா அழிவற்றதென்பதும் தெளிவாகிறது.

ஆத்மாவும், பரமாத்மாவும் இந்த உலக நாடகத்திலிருந்து விலகி மறைந்து விடும் நிலை ஒருபோதும் ஏற்படுவதில்லை. காரணம் ஆத்மாவும், பரமாத்மாவும் இறவா நிலை பெற்றவர்கள். அதாவது சிரஞ்சீவிகள். இவ்வாறு சிரஞ்சீவித்துவம் உடைய காரணத்தாலேயே ஆத்மாக்கள் மீண்டும், மீண்டும் இங்கேயே (பூலோகத்தில்) வெவ்வேறு சரீரங்களைத் தரிப்பதும், மேலும் புதிதாக அவ்வப்போது மேலிருந்து கீழிறங்கி வரும் ஆத்மாக்களும் சரீரம் தரித்துக் கொள்வதுமாக, காலப்போக்கில் ஜனத்தொகை கல்ப முடிவு வரை அதாவது ஒவ்வொரு கல்பத்திலும், கல்பத்தின் இறுதி வரை எண்ணிக்கையானது அதிகரித்துக் கொண்டேயிருக்கின்றது.

ஆத்மா ஒன்றல்ல. ஒவ்வொரு ஆத்மாவின் பதிவுகளும் தனித்தனியானவை, அழிவற்றவை. ஆதலால் ஒரே குடும்பத்தைச்

சார்ந்தவர்களும் ஒரே மாதிரியாக இல்லாமல் குணத்திலும், சுபாவத்திலும் வேறுபட்ட சூழ்நிலைகளில், பொருளாதார ஏற்றத் தாழ்வுள்ள குடும்பங்களில் பிறப்பெடுப்பதையும் காண முடிகிறது. இந்த வேறுபாடுகளும், ஒரு விதி முறைக்குட்பட்டே நடப்பதாக உள்ளது. அடுத்த பிறவி இதற்கு முந்தைய பிறவியின் பதிவு களின் எஞ்சிய பிரதிபலிப்பு மற்றும் தொடர் பிறவிகளின் ஆதாரத்தில் அமைகிறது. ஆத்மா வின் முதற் பிறவிக்கே அதற்கு ஆதாரமான பதிவுகளே காரணம் என்பதை ஏற்கனவே பார்த்தோம். மேலும் முந்தையை பிறவியின் பதிவுகளின் ஆதாரத்தின் தொடர்ச்சியாகவே அடுத்த பிறவி அமைகிறது என்றும் தெரிந்து கொண்டோம். இந்த அடுத்த பிறவி என்பது கலியுகத்தின் இறுதிவரை தான். இது இந்தக் கல்பத்தின் கணக்கே தவிர, இதற்குப் பிறகு பிறவியே இல்லை என்று பொருளாகாது. அதாவது இந்நிலையில் ஆத்மாக்கள் அனைத்தும், தனது இருப்பிடமாகிய பிரம்ம தத்துவத்திற்கு அதனதன் கணக்கின் படியான ஓய்வுக்காக, திரும்பிச் செல்ல வேண்டும் என்பது தான். ஆனால் ஆரம்பத்தில் மேலிருந்து கீழிறங்கி வந்தபோது எளிதாகவே இருந்தது போல, உடனே மேல் நோக்கிப் பறந்து செல்ல முடிவதில்லை. காரணம் என்ன? தான் இறங்கி வந்தபோதிருந்த நிலையில் ஆத்மா இப்பொழுதில்லை. அதாவது இறங்கி வந்தபோது கர்மபந்தனம் இருக்கவில்லை. இப்போது ஆத்மாவுக்கு அந்த சுமை உள்ளது.

பிறவி என்பது ஆத்மாவானது சரீரத்தின் மூலமாக உலக வாழ்க்கையில் கொண்டிருந்தது சம்மந்தம் எனலாம். சம்மந்தமெனும் காரியத் தொடர்பு. இதற்குப் பிரதிபலன்கள் உண்டு. இதில் நன்மை, தீமை இரண்டும் அடங்கும். இவ்வேறுபாடுகள் ஆத்மாவானது வெவ்வேறு சூழ்நிலைகளில் பிரதிபலிக்கும் ஆற்றலின் ஆதாரத்தில் அமைகிறது. ஆரம்ப காலத்தில் ஆத்மாவானது பல பிறவிகளில் சுகத்தையே அனுபவம் செய்தாலும், நாளடைவில், காலத்தால், தத்துவத்தின் சம்மந்தத்தில் வெளிவாயுமண்டல பாதிப்பில், அதன் சுக அனுபவம் குறைய ஆரம்பிக்கிறது. சுகம் குறைந்து போவதற்கான காரணம் செய்த தவறான காரியங்கள். அதாவது ஆத்மா தன் சுய நிலை மறந்து தான் ஒரு சரீரம் என்ற தவறான நோக்கில் சிக்குண்டு விடுகிறது. இதன் காரணமாக, மேலும் மேலும் தவறுகளும், பிரதிபலிப்புகளும் பெருக ஆரம்பிக்கின்றன. ஒரு பிறவியில் செய்த கர்மங்களுக்கு அனுபவிக்கப்படாமல் மீதமிருக் கின்ற பலாபலன்கள் ஆத்மாவில், பதிவுகளாகவே, அடுத்த பிறவிக்கு எடுத்துச் செல்லப்படுகிறது. இவ்வாறான கல்ப முடிவில், கடைசிப்பிறவியில் இன்னும் அனுபவம் செய்யப்பட வேண்டிய நிலையில் இருக்கும் கர்மத்தின் சுமை மிக அதிகம். இதனால், ஆத்மா உடனேயே திரும்பிச் செல்ல முடியாத தடையாக இருக்கின்றது. இதனால் ஆத்மா சரீரத்தை விட்டுப்பிரிய முடியாமல் ஆத்மா அமைதியிழந்த நிலையில் துக்கத்தை அனுபவித்துக் கொண்டிருக்கின்றது. எப்படி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த நோயாளியின் மருத்துவக்கணக்கு பில் தீர்க்கப் படாதவரை டிஸ்சார்ஜ் செய்யப்படுவ தில்லையோ, அதுபோலவே ஆத்மாவின் கணக்குத் தீர்க்கப்படும் வரையிலும் சரீரத்தை விட்டுப்பிரிய முடிவதில்லை. காலத்தின் கணக்குப்படி இது அதர்மத்தின் உச்சகட்டம். இது சூட்சும பந்தனம். ஆதலால் ஆத்மாவிற்கு உதவி அவசிய மாயிருக்கின்ற இந்த சமயத்தில் உதவி செய்யப் போவது யார்? ஆத்மாவுக்கு சரீர பந்தனத்திலி ருந்து அதன் சரீர சம்மந்த கர்ம கணக்கிலி ருந்து விடுதலை அளிக்கக்கூடியவர் யார்? அந்த இடத்திற்கு வழிகாட்டி அழைத்துச் செல்லக் கூடியவர் யார்? இத்தகைய இக்கட்டான பரிதாபகரமான சூழ்நிலையில் தான் ஆத்மாவுக்கு தனது சொந்தமான பரமாத்ம தந்தை (இறைவன்) நினைவுக்கு வருகிறது. இந்த நினைவு, அல்லது எதிர்பார்ப்பு, பரமாத்மாவுடன் சூட்சுமமான

இணைப்பை உண்டாக்கி விடுகிறது. ஆத்மாக் களுக்கு உதவி அவசியமாயிருக்கின்ற இந்த சூழ்நிலையில் தான் அதற்கு வழிகாட்டி, விடுதலை அளிப்பதற்காக, பரமாத்மாவாகிய இறைவன், இப்பூவுலகில் அவதாரம் செய்கின்றார். முக்தியும், ஜீவன் முக்தியும் அளிக்கின்றார். அதாவது நாடகப்படி, உரிய முறையில் ஆத்மாவானது சரீர பந்தனம் மற்றும் கர்ம பந்தனத்திலிருந்து விடுவிக்கின்றது என்பதாகும். இவ்வாறு விடுதலை பெற்ற ஆத்மா தன்னிடமுள்ள பிரதிபலிப்புகள் அனைத்தும் ஒடுங்கிய நிலையில், ஆதி சுபாவத்தோடு நியதிப்படி, பிரம்மதத்துவத்திற்குத் திரும்பிச் செல்கிறது. எனினும் இதற்கு முன்பு குறிப்பிட்டுள்ளதைப்போல, பிறவியிலிருந்து நிரந்தரமாகக்கிடைக்கப்பெற்ற விடுதலை அல்ல. மாறாக அடுத்த கல்பத்தில் மீண்டும் தான் கீழிறங்கிச் செல்ல வேண்டிய நேரம் வரையிலான இடைக்கால ஓய்வு தான். இந்த ஓய்வு காலமானது ஒவ்வொரு ஆத்மாவுக்கும் வித்தியாசப்படும். இக்காலமானது சில ஆண்டுகளிலிருந்து சில ஆயிரம் ஆண்டுகள் வரையிலும் நீடிக்கக்கூடிய நாடக அரங்கில் உள்ளன என்று பொருள்.

இவ்விதமாக ஆத்மாவின் பதிவுகள் (சம்ஸ்காரம்) ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு விதமாக இருப்பதிலிருந்தே ஆத்மா என்பது ஒன்றல்ல, அவை எண்ணிக்கையில் பல என்பதும் உறுதியாகிறது. இதனை இரு உதாரணங்கள் மூலமாக பார்க்கலாம்.

முதலாவதாக இந்த உலகு ஒரு நாடக அரங்கம் எனக்கொண்டால் எல்லா ஆத்மாக் களும் நடிகர்கள். எப்படி இன்றைய நாடகத்தில் ஒவ்வொருவரும் நடிக்கும் மேடைக்கு வருமுன்பே தான், என்ன செய்ய வேண்டு மென்பதைப்பற்றித் தெரிந்து வைத்துக் கொண்டு அந்த பாத்திரத்திற்கேற்ப வேடம் அணிந்து தனக்குச் சொந்தமான பதிவுகளை எண்ணம், சொல், செயல் வடிவமாக உலக அரங்கில் பிரதிபலிக்கின்றன. முழு கல்பத்திலும், தான் எத்தனை பிறவி எடுக்க வேண்டுமோ, அத்தனைக்கும் அந்தந்த ஆத்மாவில் பதிவுகள் நிச்சயிக்கப்பட்டுள்ளன. இது மிகவும் வியக்கத் தக்க விசேஷமான ஆத்மாவின் தன்மையாகும். இதன் மூலம், இரு நடிகர்கள் (ஆத்மாக்கள்) ஒரு பாத்திரத்தில் நடிப்பதில்லை என்றும் ஒவ்வொன்றின் பங்கும் தனித்தனி யானது என்றும் அறிகின்றோம்.

இரண்டாவதாக ஆத்மாவை ஒரு செடியின் விதைக்கு ஒப்பிடலாம். எப்படி ஒரு விதையில், ஒரு முழு செடி அல்லது ஒரு பெரிய விருக்ஷமாக வளர்வதற்கு அவசியமான சத்துக்கள் அடங்கியிருப்பதோடு, விதையிலி ருந்து முதலில் இரு இலை, இளந்தளிர், செடி, கிளை, பின்னர் பெரிய மரமாக முறையாக வளரும் வகையில் விதைச்சத்து அமைந்திருப் பதைப்போல ஆத்மாவில் அத்தனை பிறவி களுக்கான பதிவுகள் முழுவதும் பதிவாகியிருக் கின்றன. முறையாக, முதலிலிருந்து கடைசி வரை என்ற கணக்குப்படி பதிவுகள் செயல் வடிவம் பெருகின்றன.

பருவகாலத்திற்கேற்ப பல்வேறு பட்டங் களுங்கேற்ப, விதைகள் விதைக்கக்கப்படுவதைப் போல, நாடகத்திற்காக எல்லா நடிகர்களும் தயாராக இருந்தபோதிலும் நாடகத்திற் கேற்ப அந்தந்த நடிகர்கள் மேடையில் தோன்றி நடிப்பதைப்போல ஆத்மாக்களும், பரமாத்மா வாகிய இறைவனும் கூட தங்கள் தங்களுக்குரிய நேரப்படி முறையாகக் கீழிறங்கி வருகின்றார்கள்.

பிரம்மலோகத்திலிருந்து கீழிறங்கி வந்து நாடகம் முடிந்து மீண்டும் பிரம்ம லோகம் திரும்பச் செல்லும் வரையிலான இடைப்பட்ட காலம் காலச்சக்கரம் எனப்படுகிறது.

## பிரம்ம லோகத்திலிருந்து, ஆத்மாக்கள் ஏன் பூலோகத்திற்கு வருகின்றன?

ஒவ்வொரு ஆத்மாவிலும் அதற்கென இருக்கும் இயற்கையான பதிவுகளின் அடிப்படையில் பூலோக வாழ்க்கை அனுபவங்களைப் பெற வேண்டுமென்ற விருப்பம் உணர்வுகளாக குறித்த நேரத்தில் தானாகவே கிளர்ந்தெழுகின்றன. அதாவது இந்த உணர்வு தான் கீழிறங்குவதற்கான காரணமாகும். இது எல்லா ஆத்மாக்களுக்கும் பொருந்தும் எனினும் நாடகத்திற்கேற்றவாறு காலம் மாறுபடு கிறது.

உலக சமுதாயத்தில் தானும் பங்கேற்று, குடும்ப வாழ்வில் ஈடுபட்டு மகிழ்ச்சியோடு வாழ வேண்டுமென்ற ஆத்மாவின் விருப்பம் மூல விருத்தி எனப்படுகிறது. இவ்வாறான வாழ்க்கை முறை பிரவிருத்தி மார்க்கம் எனப்படுகிறது. இது இருவகையானது. ஒன்று தூய்மையை அடிப் படையாகக் கொண்ட இல்லற வாழ்க்கை. மற்றது சாதாரண இல்வாழ்க்கை . முதலாவது தெய்வீக முள்ள பிரவிருத்தி இரண்டாவது விகாரி (அசுர சுபாவம்) வாழ்க்கை.

இதைத் தவிர இன்னொரு மார்க்கமும் உண்டு. இல்வாழ்க்கைத் துன்பங்களைக் காண சகிக்க முடியாமல், இது மாயை என்றெண்ணி, கர்மம் செய்வதை பந்தனமாகக் கருதி, வெறுத்து, சந்நியாசம் மேற்கொள்வது அவர்கள் கர்மத்துறவிகளாவர். ஆதலால் இது நிவிருத்தி மார்க்கம் எனப்படும்.

அடுத்தப்படியாக ஆத்மாவானது உலக வாழ்க்கைச்சுற்றை ஒருமுறை முடித்து தன் இருப்பிடமாகிய பிரம்ம லோகம் திரும்பிய பின்னர், மீண்டும் உலக வாழ்க்கையை தொடரு வதற்காக பூலோகம் வருவது ஆவிருத்தி எனப்படும்.

இம்மாதிரியாக ஒவ்வொரு ஆத்மாவும் மீண்டும் மீண்டும் முதலில் இறங்கி வந்த முறைப்படியே இறங்கி வருவதும், முன்போலவே (எப்படி ஒரு சினிமா படச்சுருள், புரோஜெக்டரில் காண்பிக்கப்படும்போது, எத்தனை முறை காண்பிக்கப்பட்டாலும், காட்சிகள் முதலிலிருந்து கடைசி வரை என்று முறையாக வருவதுபோல) வாழ்வதும், திரும்பிச் செல்வது மான தொடர் நாடகத்திற்கு புனரா விருத்தி எனப்படுகிறது.

இவ்வாறாக இந்த நாடகம் நிச்சயிக்கப்பட்ட ஒன்றாக இருக்கின்றது. எனவே தான் எல்லாம் அவன் செயல் என்றும், அவனன்றி அணுவும் அசையாது எனவும் நம்பப்படுகின்ற சொல் வழக்கில் உள்ளது.

அப்படியானால், நாம் ஏன் முயற்சி செய்ய வேண்டும் என்ற கேள்வி எழக்கூடும்? செயலுக்கு முக்கியத்துவம் உண்டு. செயல் நம்மிடமிருந்து பிரிக்க முடியாதது. மூச்சு விடுவதும் செயல் தான். செயல் இல்லையேல் ஒன்றுமேயில்லை. உண்மையில், செயலின்றி, முயற்சியின்றி, விதி என்பதோ, பலன் என்பதோ இருக்க முடியாது. செயல் தான் விதி என்றும் பூட்டைத் திறக்கும் சாவி, உலக இயக்கம், கட்டுப்பாடற்ற போக்கில் நிகழ்வதில்லை. மாறாக முறையான திட்டப்படி இயற்கை விதிப்படி தான் நடந்து கொண்டிருக்கிறது என்பதாகும்.

மனித ஆற்றலின் காரணமாகவே உலகில் ஒவ்வொரு அணுவும்,. காட்சியும், மாறி மாறியும் ஆனால் முறையாகவும், எந்த தவறின்றியும் திட்டமிட்டபடியே இயங்கிக் கொண்டிருக்கின்றன. இதனை இறைவன் அவதாரத்தின் போது தெளிவாக அறியமுடிகிறது. இறைவன் மூவுலகையும், முக்காலத்தையும் அறிந்தவர். அவர் திரிகாலதரிசி. இவ்வுலக இயக்கம் முறைப்படி இயங்கி வருவதன் காரணமாகவே, அடுத்து என்ன நடக்கவிருக்கிறது என்பதை முன்கூட்டியே அவரால் நம்மை எச்சரிக்கவும் முடிகிறது. மிக விரைவில் நிகழவிருக்கின்ற மிகப்பெரிய உலகமாற்றமே அந்த எச்சரிக்கை யாகும். உலக நிகழ்வுகள் யாவும், ஒரே மாதிரி யாகவும், முறைப்படியும் நடப்பதாக இருந்தால் தான் அதை சாசுவதமானது என்று கூற முடியும்.

உலக நாடகம் சாசுவதமான ஒன்று.

இறைவன் அருள் வாக்கு: எனது மேற்பார்வையில் அழிவற்ற ஆத்மாக்களும், இயற்கையும், கல்ப கல்பமாக ஒரு சக்கரம்போல் இயங்கிக் கொண்டிருக்கின்றது. ஆத்மாவின் தனித்தன்மையையும், பூலோகத்திற்கு இறங்கி வருவதற்கான காரணங்களையும் யாரும் அறிந்திருக்கவில்லை. பல ஆன்மீக வாதிகள் சரீரத்தில் ஆத்மா இருப்பதை ஒப்புக் கொள்வர். ஆனால் இந்த ஆத்மா எங்கிருந்து இந்த சரீரத்தில் வந்ததென்பதையோ, எப்போது எப்படி திரும்பிச் செல்கிறது என்பதையோ அறிய வில்லை. மேலும் எந்த விதிக்குட்பட்டு ஆத்மாவுக்கு சரீரம் அமைகிறது என்பதும் தெரியாது. இதைப்பற்றி அறியவிரும்புவோர் ஆழ்ந்து சிந்திக்கட்டும்.

**உலகம் எப்போதாவது, முழுமையாக அளிந்து விடுகிறதா?**

இல்லை. உலக அழிவு என்பது ஒன்றுமே இல்லாமல் போய்விடுகின்ற ஒரு நிலை அல்ல. இப்படி ஒருபோதும் உலகில் ஏற்படுவதில்லை. இந்த உலகம் முழுவதும் ஒரு அணுவாக மாற்றமடைந்து விடுவதோ, இப்பூலோக கர்ம க்ஷேத்திரத்தில் மனிதர்களே இல்லாமல் போய்விடுகின்ற ஒரு நிலையோ ஒருபோதும் ஏற்படுவதில்லை. எவ்வாறு புத்தாண்டு பிறந்தவுடன் மீண்டும் நான்கு புதுயுகங்கள் ஆரம்பமாகின்றன. இது ஒரு சக்கரம். மேலும் உலக அழிவு என்பது பலவித தீமைகள், அதர்மங்கள், க்ஷீணமடைந்து பல தர்மங்கள் அழிகிறது. ஒரே ஒரு தர்மம் ஸ்தாபிக்கப் படுகிறது. பழையன அழிகிறது. புதியன மலர்கிறது. இது மிகப்பெரிய உலக மாற்றமாகும்.

## விஞ்ஞானமும், மெய்ஞானமும்



விஞ்ஞான ஆராய்ச்சியின் விளைவுகள், இன்று கண்டுபிடித்தவனையே மிரட்டிக் கொண்டிருக்கிறது. காரணம், விஞ்ஞானம் தனித்திருப்பது தான். மனிதனுடைய அகம், புறம் என்ற இரண்டில், புறம் ஒன்றுக்குத் தான் விஞ்ஞானத்தால் முக்கியத்துவம் தர முடிந்துள்ளது. இதன் விளைவு மனிதனை ஆட்டிப்படைக்கிறது. அழிவுப் பாதைக்கும் கொண்டு செல்கிறது. மனிதனுக்கு அடிமையாக இருப்பதற்குப் பதிலாக மனிதனை அதிகாரம் செய்கின்றது. மனிதனைக் காப்பதற்குப் பதிலாக அவன் அழியும் அபாயத்தை உண்டாக்கிக் கொண்டிருக்கிறது. ஆதலால் விஞ்ஞான ஆராய்ச்சிகள் மனிதனின் உண்மை சொரூபத்திற்கு உயர் தன்மைக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும். விஞ்ஞானத்தின் மற்ற பிரிவுகளும், மனித குல நன்மையை உத்தேசித்தே இயங்க வேண்டும். அதாவது விஞ்ஞானமும், மெய் ஞானமும் இணைந்து செயல் பட வேண்டும் . இதுவே உகந்தது.

**அறிவியல் புதியதாக ஏதையும் உருவாக்குவதில்லை**
**இயற்கை படைப்பின் அதிசயங்களை**
**மனிதன் உணர முயற்சிப்பதே அறிவியல்**



**ஜெயங்கொண்டம்:** காசிவிஸ்வநாதர் தரிசன நிகழ்ச்சியினை துவக்கி வைப்பவர்கள் பி.கு. சீதாலட்சுமி, திரு. முத்து முருகன், மாவட்ட நீதிபதி மற்றும் முக்கிய விருந்தினர்கள்



**கல்பாக்கம்:** CISF சேர்ந்தவர்களுக்காக ஏற்பாடு செய்யப் பட்டிருந்த மன இறுக்கத்திலிருந்து விடுதலை பயிற்சியினை பி.கு. தினாஷா அவர்கள் வழங்கினார்



சென்னை: அயனாபுரத்தில் பி.கு. பீனா மற்றும் முக்கிய விருந்தினர்களுடன் புதிய கீதாபாடசாலை திறக்கப்பட்டது.



**தஞ்சாவூர்:** 79வது சிவஜெயந்தி விழா நிகழ்ச்சியில் உரையாற்றுகின்றார் பி.கு. ஞானசுந்தரி



**கரூர்:** புலியூரில் புதிய கீதாபாடசாலை திறப்பு விழாவில் கொடி ஏற்றுபவர் பி.கு. சாரதா



**கரூர்:** 79 சிவஜெயந்தி விழாவில் நகர முக்கிய விருந்தினர்களுடன் குத்துவிளக்கு ஏற்றுபவர் பி.கு. சாரதா



**சென்னை:** இராமாபுரத்தில் 79 சிவஜெயந்தி விழாவினை முன்னிட்டு ஏற்பாடு செய்யபட்டிருந்த காசி விஸ்வநாதர் தரிசன நிகழ்ச்சியில் முக்கிய விருந்தினர்களுடன் பி.கு. பானுரேகா



**திருச்சி:** சிவானந்த பரமஹம்ஸர் அவர்களின் ஜென்ம தின விழாவில் கலந்து கொண்ட பி.கு. மல்லிகா மற்றும் தலைவர் மணிவண்ணன், நீதிபதி துரைசாமி, முன்னாள் கார்ப்பரேசன் கமிஷினர் தண்டபாணி மற்றும் பிரமுகர்கள்



**பரமத்திவேலூர்:** TN Home Guard Camp லில் ஏற்பாடு செய்யப் பட்டிருந்த சிறப்பு நிகழ்ச்சியில் உரையாற்றுபவர் பி.கு. அம்பிகா



**பரமத்திவேலூர்:** TN Home Guard Camp லில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சிறப்பு நிகழ்ச்சியில் கலந்துகொண்டோர்.



**ஈரோடு:** சிவஜெயந்தி விழாவினை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பனிலிங்க தரிசன நிகழ்ச்சி துவக்க விழாவில் உரையாற்றுபவர் பி.கு. கலாவதி அவர்கள் உடன் நகர விருந்தினர்கள்



**திருநெல்வேலி:** 79 சிவஜெயந்தி விழாவினை துவக்கி வைப்பவர்கள்: மேயர் திருமதி B. புவனேஸ்வரி, பி.கு. சீதாதேவி, அருட் தந்தை அந்தோனி குருஸ், அருட் சகோ. நிர்மலா தேவி, பி.கு. புவனா



**தேனி:** +1 மாணவர்களுக்கு ஒரு நாள் விழிப்புணர்வு பயற்சி மூகாம் நடைபெற்றது. முகாமில் கலந்து கொண்ட மாணவர்களுடன் பி.கு. சங்கர்



**குடியாத்தம்:** 79வது சிவஜெயந்தியினை முன்னிட்டு சிவபாபாவின் கொடியினை ஏற்றுபவர் பி.கு. தனலட்சுமி (நெய்வேலி) பி.கு. பாபுராஜ் மற்றும் பி.கு. சகோதர சகோதரிகள்.




**உடுமலைப்பேட்டை:** 79வது திருமூர்த்தி சிவஜெயந்தி விழாவில் உலக அமைதிக்கான பேரணியில் கலந்து கொண்ட பிரம்மாகுமார் குமாரிகள்



**தஞ்சாவூர்:** சாமியப்பா கூட்டுறவு பயிற்சி மையத்தில் உள்ளவர்களுக்கு மன இறுக்கத்திலிருந்து விடுதலை பற்றி உரை நிகழ்த்துகின்றார் பி.கு. முத்துலட்சுமி

# தோல்வியிலும் வெற்றிப்படிகட்டு

பி.கு. சென்பகராஜ், மதுரை




ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் தோல்வியைப்பற்றி யாரும் பேசமாட்டார்கள். ஏன் என்றால் தோல்வியில் அதிகமான வலி இருப்பதால் அதிலிருந்து எவ்வளவு சீக்கிரம் வெளியில் வருகின்றோமோ அவ்வளவு நல்லது என்று நினைக்கின்றோம். ஆகையால் அதைப் பற்றி அதிகமாக சிந்திப்பது கூட தவறு என்று நினைக்கின்றோம். ஆனால் அது கூட தவறு தான். அந்த தோல்வியிலிருந்து என்ன கற்றுக் கொள்ளவேண்டுமோ அதை கற்றுக்கொள் வதில்லை என்று அர்த்தம். பிறர் நம்மைப் பற்றி ஆஹா ஆஹா என்று சொன்னால் மட்டும் சந்தோஷமாக இருக்கின்றோம், மாறாக குறை கூறும்பொழுது துக்கப்படுகின்றோம்.

சில நேரங்களில் நம்முடைய வெற்றி, தோல்வியிலிருந்துதான் ஆரம்பமாகின்றது. கீழே விழுவது தவறு அல்ல கீழே விழுந்த பிறகு எழுந்திராமல் இருப்பது தான் தவறு. தோல்வி வருகின்றபொழுது அதைக் கண்டு நாம் பயப்படத் தேவையில்லை. நாம் பொறுத்திருக்க வேண்டும். அதைப் பின்தொடரவேண்டும். பிறகு தான் நாம் வெற்றி அடையமுடியும்.

பள்ளியில் சராசரி மாணவனாக இருந்த கரம்சந்த் காந்தி மகாத்மாவாக, தேச தந்தையாக ஆகவில்லையா? பள்ளியில் கூடைப்பந்து பயிற்சியில் கூட தள்ளி வைக்கப்பட்ட மைக்கேல் ஜோர்டன், உலகப் புகழ்பெற்ற கூடைப்பந்து வீரராகவில்லையா? முதல் வருடத்தில் 400 பாட்டில் மற்றும் 15 பிளேடு மட்டுமே விற்பனை யான கோகோலா பானம் (தேனீர்) மற்றும் ஜில்லேட்டு கம்பெனிகள், இன்று இவ்வளவு பெரிய சாதனை படைக்கவில்லையா? ஜே. கே. ரௌலின் என்பவரின் புகழ் பெற்ற காவியமான ஹாரிப்பாட்டரின் முதல் பதிப்பை 30 பதிப்பகங்கள் வெளியிட தயக்கம் காட்டியதாம், அவர் இன்று மிகப் பெரிய செல்வந்தராக ஆகவில்லையா? போலியோ தாக்கப்பட்ட பெண்மணி வில்மா ரூடால்ப், ஒலிம்பிக், 100 மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் முதலில் வந்து தங்கம் வெல்ல வில்லையா? காலேஜ் வாழ்க்கையைக் கூட தொடரமுடியாதவர் பில்கேட்ஸ், ஆனால் இன்று உலகத்திலேயே மிகப்பெரிய செல்வந்தவராக ஆகவில்லையா? பல ஆண்டுகளாக செய்யா முடியாததை, லால்பகதூர் சாஸ்திரி அவர்கள், 18 மாதங்களில் செய்து முடித்துவிட்டாராம். 4 அடியே உயரம் கொண்ட அவர், பல பிரதம மந்திரிகளில் மிக உயர்ந்தவராக ஆகவில்லையா?. பிரஸ்ட் சுமித் என்ற மாணவனுக்குத்தான், தபாலையோ பார்சலையோ மறுநாளே கொண்டு சென்று சேர்க்க முடியும் என்ற எண்ணம் முதன் முதலி ல் உதயமானது. தனது பேராசிரியரால் அந்தக் கருத்தை செயலில் கொண்டுவரமுடியாது என்று மறுக்கப்பட்டாலும், பெடரல் எக்ஸ்பிரஸ் என்ற முதல் கூரியர் சர்வீஸ் ஆரம்பிக்க வில்லையா? இவர்கள் எல்லாருமே தோல்வியாளர்களா? வெற்றியாளர்களா? ஆனால் இவர் கள் அனைவரும் ஒரு நிலையில் தோற்றவர்கள் தான். ஒரு வேளை தன்னை அவர்கள் தோல்வி யாளர்களாக பார்த்திருந்தால் அடுத்த ஒரு அடி கூட எடுத்து வைத்திருக்க முடியாது. எப்பொழுதுமே வெளி உலகத்தால் தோல்வி என்ற ஒரு லேபிள் (ஒரு முத்திரை) கொடுக்கப்

படும். அது முத்திரைதானே தவிர அது உண்மை யாக இருக்கும் என்பது அல்ல. மேலே கண்ட இவர்களிடம் ஒரு ஒற்றுமை என்ன வென்றால் இவர்கள் யாரும் தன்னைப்பற்றி மற்றவர்கள் அல்லது இவ்வுலகம் என்ன கூறியது என்பதை ஏற்றுக் கொள்ளவே இல்லை, ஒருவேளை ஏற்றுக் கொண்டிருந்தால் அவர்கள் தோல்வி அடைந்திருப்பார்கள். அதனால் தான் இவர்கள் வெற்றி அடைந்தார்கள். எனவே பலமுறை தோல்வியே அடைந்தாலும் மனதை சோர்வு அடையவிடாதீர்கள்.

தனது வாழ்க்கையில் 23 வயதிலிருந்து தொடர்ந்து பல தோல்விகளை சந்தித்த ஆப்பிர காம்லிங்கன் இறுதியாக 58 வயதில் தான் அமெரிக்க ஜனாதிபதி ஆனார். 47 வயது வரை அப்துல்கலாம் என்ற மாமேதை இருப்பது வெளியில் தெரியவே இல்லை, இவர்களெல்லாம் அவ்வளவு காலம் சும்மாவா இருந்திருப்பார்கள். இப்பொழுது நீங்கள் தன்னுடைய வெற்றிக்காக எத்தனை வருடங்கள் காத்திருக்க போகிறீர்கள்? ஒரு பரிட்சையைக் கூட சரியாக பாஸ் செய்ய முடியவில்லை, ஒரு காரியத்தை கூட சரியாக முடிக்க முடியவில்லை, யாராவது ஏதாவது சொல்லிவிட்டால் உடனே மனச்சோர்வு அடைந்து விடுகின்றீர்கள், சிலர் தற்கொலை வரை சென்று விடுகின்றார்கள். அதற்கு என்ன அர்த்தம். இவ்வளவு பலவீனமானவராக ஆகாதீர்கள். யார் மனபலம் கொண்டவர்களாக இருக்கின்றார்களோ, வாழ்க்கை நிச்சயம் அவர்களை புகழடையச் செய்யக் காத்திருக்கும். (life rewards those people, who are strong). காத்திருந்தால் கனி இனிப்பாக இருக்கும். வாழ்க்கையில் வெற்றி என்பது திடீர் புளியோ தரையல்லவே!

எப்பொழுது வெற்றிக் கிடைக்கின்றதோ அப்பொழுது தன்னம்பிக்கை இருக்கின்றது. ஒரு முறை தோல்வி ஏற்பட்டால் கூட தன்னம்பிக்கை சோடா வாட்டர் போன்றாகிவிடுகின்றது. அடிக்கடி பிறருடன் தன்னை ஒப்பிடுகின்றோம். உங்களுடைய வகுப்பில் எல்லோரும் தோல்வி டையந்துவிட்டாலும் அதில் நீங்களும் பெயில் தான் ஆனாலும் நமக்கு துக்கம் அதிகமாக இருக்காது. நாம் மட்டும் பெயில் என்றால் ஏற்படும் துக்கம் அதிகமாக இருக்கின்றது ஏன்? இரண்டும் பெயில் தான். நான் தோல்வியாளர் என்று நாம் எப்பொழுது தன்னைப் பிறருடன் ஒப்பிடுகின்றோமோ அப்பொழுது தான் அந்த துக்க உணர்வு வருகின்றது.

குழந்தைப்பருவத்திலிருந்தே, இவ்வளவு மார்க் எடுக்கவில்லையெனில் நீ பெயில், இந்த காலேஜ் கிடைக்கவில்லை என்றால் நீ பெயில் என்று நம்முடைய தாய் தந்தை, டீச்சர், கூறிவரு கின்றனர். டிவி, மீடியாவிலும் கூட கையைக் காட்டும் போது கைதசை தடிமனாக இருக்க வேண்டும் இல்லை எனில் பெயில் என்று காட்டி நமக்கு தோல்வி மீது ஒரு பயத்தை ஏற்படுத்தி வைத்துள்ளனர்.

ஒரு குழந்தை பல முறை கீழே விழுந்து விழுந்து எழுவதை நாம் பார்த்து ரசிக்கின்றோம், ஆனால் அந்தக் குழந்தையை தோல்வியாளர் என்று நினைப்பதில்லை. அதே போல் உங்களின் பலசெயல்களில் ஒருசில தோல்வி ஏற்படலாம், அது மொத்தமாக தோல்வி என்று அர்த்தமல்ல, தான் முற்றிலும் தோல்வியடைந்து விட்டேன் என்று நினைக்கமாட்டோம். ஒரு செயலில் தான் தோல்வி. நீச்சல் தெரியாத உங்களை கிணற்றில் தள்ளிவிட்டால் காலை உதைக்கும் வரை மூழ்க மாட்டீர்கள். குத்துச் சண்டையில் கீழே விழுந்தால் தோல்வி என்று கூறமாட்டார்கள். நடுவர் 10 எண் எண்ணுவதற்குள் எழுந்து விட்டால் தோல்வி அல்ல. ஏதாவது ஒரு காரியத்தில் வெற்றிக் கிடைக்கவில்லை என்றால் நீங்கள் அந்த காரியத்தில் தோல்வி அடைந்துள்ளீர்கள் என்று அர்த்தமல்ல. வெற்றி கிடைக்காததால் முயற்சி செய்வதை கைவிடுவதுதான் தோல்வி (தவறு), கீழே

விழுவது தோல்வியல்ல, கீழே விழுந்தபிறகு எழவில்லை என்றால் மட்டும் தான் தோல்வி யடைந்ததாக அர்த்தம். கீழே விழுவது தவறல்ல, ஆனால் கீழே விழுந்தபிறகு விழுந்தே கிடப்பது தான் தவறு.

முயற்சி செய்து கொண்டேயிருக்கின்றீர்கள் என்றால் இது வரை வெற்றிகிடைக்கவில்லை அவ்வளவு தான், தோல்வியடைந்து கொண்டே யிருக்கின்றீர்கள் என்றால் வெற்றிகிடைக்க வில்லை என்று அர்த்தமல்ல. இது வரை வெற்றி யடையவில்லை என்பது தோல்வியல்ல. நீங்கள் இன்னொரு முறை முயற்சி செய்யாத வரைக்கும் வெற்றியாளர் அல்ல.

முன்னேற்றத்தை அடைந்தவர்கள் வரிசையில் அம்பானி கீழ் நிலையிலிருந்து தான் உயர்ந்த மனிதரானார், முதல் டெஸ்டிலே ஒரு ரன்னும் எடுக்காமல் அவுட்டாகிவிட்ட சச்சின் டென்டுல்கர், பின்பு அவர்தான் சதத்தில் சதம் கண்டார். யாருடனும் ஒத்துப்போகாத உயரம், ஒல்லியான பலவீனமான உருவம் என்று திரை வல்லுனர்களால் ஒதுக்கப்பட்ட அமிதாப்பாச்சன், லெஜண்ட் ஆப் ஸ்கீரின் (முதல் தர நடிகர்) பட்டம் வென்றார். படப்பிடிப்பில் கத்தி குத்துப் பட்டு, இனி நடிக்கவே வரமுடியாதபடி இருந்த இவர் தனது மனோபலத்தால் மீண்டு வந்தார். இந்த ஹீரோஸ் எல்லாரும் இழந்தவர்கள் ஆனால் தோற்கடிக்கப்படவில்லை. சில முறை தோல்வியுற்றார்கள் ஆனால் முற்றிலுமே தோல்விடையவில்லை (They were lost, but they were not defeated, still in game). அவர்கள் இன்னும் விளையாட்டில் உள்ளார்கள்.

உங்களது வெற்றி நிர்ணயிக்கப்பட்டது என்று எண்ணுங்கள். வெற்றியடைவதற்கு தோல்வி ஒரு இன்ஸ்டால்மெண்ட் (failure is an installment you pay for success). வெற்றிக்ககாக தோல்வி என்பது நாம் கட்டும் ஒரு டியுசன் பணமாகும் (Failure is a tuition fee, you pay for success) . வெற்றி கிடைக்கவில்லை என்றால் முயற்சியை ஒரு பொழுதும் விட்டுவிடாதீர்கள். தைரியத்தை விட்டுவிடாதீர்கள். வெற்றி என்பது நிச்சயிக்கப்பட்டது என்று நம்புங்கள்.

### வாழ்க்கை ஒரு நம்பிக்கை:

நம்பிக்கையால் ஆனதே வாழ்க்கை, வாழ்க்கையில் அனைத்தும் புரியும் என்று உங்கள் புத்தியை நம்புங்கள். தெரியும் என்று உங்கள் திறமையை நம்புங்கள். பல பிரச்சனைகள் (கணக்குகள்) தெளியும் என்று நல்ல தீர்வை நம்புங்கள். விளையும், திறமைகள் துளிரும் என்று அறிவின் விதையை நம்புங்கள். வாழ்வு விடியும் என்று உயர்ந்த இலட்சியம் என்ற விண்ணை நம்புங்கள். சுகமான எதிர்காலம் நம் வாழ்வில் உதிக்கும் என்று இலட்சணசூரியனை நம்புங்கள். கனவுகள் நினைவுகளாக பிறக்கும் என்று தினமும் நல்விடியலை நம்புங்கள். வசந்தம் வாழ்வில் திறக்கும் என்று உங்களுக்கே உண்டான அதிர்ஷ்டத்தை நம்புங்கள். எனக்கு கிடைக்காதது எதுவுமில்லை என்று கடின உழைப்பை நம்புங்கள். நன்மைகள் நடக்கும் என்று தன் நடத்தையை நம்புங்கள். நல்லவர் களுக்காக துடிக்கும் என்று நல் உள்ளத்தை நம்புங்கள். வளத்தை கொடுக்கும் என்று சீரிய கொள்கையை நம்புங்கள். என்னால் முடியும் என்று தன்னை நம்புங்கள்.

உலகை மாற்றவேண்டும் என்று விரும்பும் உள்ளங்களே, உலகை மாற்ற உங்கள் எண்ணங்களை மாற்றுங்கள் - என்ற அடை மொழியை கூறியது யார் தெரியுமா? என்று ஒரு பேராசிரியர் ஐ.ஏ.எஸ் மாணவர்களைப் பார்த்து கேட்டார். பலர் பல முன்னோர்கள், பெரியோர்கள், தலைவர்கள் பெயரை நினைவுபடுத்தி கூறினார்கள். ஒருவர் மட்டும் இதை யாரும் கூறவில்லை, இது ஒவ்வொருவரின் பொன் மொழி என்றார். மற்றவர் பெயர் வந்தால் அது தவறு என்றும் கூறினார். ஏனெனில் உங்களால் உலகம் மாறவேண்டும் என்று நீங்கள் எண்ண வில்லையே. உங்கள் எண்ணங்களில் மற்றவர்கள்

நினைவுக்கு வருகின்றார்கள் என்றால் நீங்கள் நீங்களாக இல்லை. எந்த பொன் மொழி எனக்காக என்று ஒலிக்கவில்லையோ, அது உங்களுடையதாக எப்பொழுதும் மாறாது? அது பொன் மொழி அல்ல, மற்றவர் மொழி. பொன்மொழிகளை தன்மொழியாக மாற்றுங்கள் அல்லது தனிமொழியை உருவாக்குங்கள். அதை அதே வடிவில் பார்த்துக்கொண்டேயிருந்தால் என்றைக்கு நாம் கடைத்தேறுவது? ஒவ்வொரு சாதனையும் படைக்கும் பொழுதும் இந்த சாதனையும் இறுதியல்ல, இதையும் யாரேனும் முறியடிப்பார்கள் என்றே கூறினார் ஒரு கிரிக்கெட் வீரர் (சச்சின்). மற்றவர் சாதனையைக் கண்டு வியப்படையாதீர்கள், தன்னை அவர்களைக்காட்டிலும் ஒருபடி உயர்ந்த வீரராக கருதுங்கள். அப்பொழுதே உலகில் தனிப்பட்ட சிறந்த மனிதராக நீங்கள் உருவெடுக்கமுடியும்.

உலகில் அனைவருக்கும் சமவிகித வாய்ப்பு உண்டு, பயன்படுத்துபவருக்கு பலன் கிடைக்கும். பூமியின் போர்வைக்குள் சோம்பேறியாக உறங்குவது போன்று நடிப்பவரை, யார் விரும்பினாலும், வெளிச்சத்திற்கு அழைத்து வரமுடியாது. முண்டியடித்துக் கொண்டு வளைந்து வருகின்றவர்கள் வெற்றிகரமான வாழ்க்கையில் பெரிய வெளிச்சத்தை பார்ப்பார்கள் என்பது நிச்சயம்.



# எனக்கு எல்லாமே கடவுள் தான்

### கடவுளுடன் நெருங்கிய சம்மந்தம் கொண்டிருப்பதன் முக்கியத்துவத்தை நான் உணர்ந்து கொண்டிருக்கிறேனா?

நான் நீண்டகாலமாக மனிதர்களுடனேயே பலவிதமான சம்மந்தம் கொண்டு வாழ்ந்து விட்டேன். இதுபற்றி இப்போது சிறிது சிந்தித்துப் பார்க்கிறேன். இது நாள் வரையிலும் வாழ்ந்த வாழ்க்கையில், ஆத்மாவாகிய என்னுடைய இப்போதைய அனுபவம் என்ன? நான் மிகவும் களைத்துப் போய்விட்டேன். ஏன்? என்னிடமிருந்த சக்திகள் அனைத்தையும் இழந்து விட்டேனா? என்னுடைய வாழ்க்கையில் இதைச் சாதித்தேன் என்பது பற்றி என்னால் நினைத்துக் கூட பார்க்க முடியவில்லை. ஏன்? ஏதாவது சாதித்திருந்தால் நினைவிருக்கும்!

கடவுளை உற்ற நண்பனாக ஆக்கிக் கொள்ள முடியுமா? முடியும். நெருங்கிய சம்மந்தம் கொண்டிருக்க முடியும். இப்படியொரு வாய்ப்புக் கிடைக்குமா? கிடைத்திருந்தால், ஆஹா! என்ன உங்கள் பாக்யம்! ஆனால் அந்த ஒரு உறவின் அனுபவத்தோடு நிறுத்திக் கொள்ளாதீர்கள். தாய், தந்தை, அன்புக்குரியவர், ஆசிரியர், குரு, குழந்தை என்ற ஒவ்வொரு சம்மந்தத்திலும் உறவாடுங்கள். உறவு கொண்டிருங்கள். அப்போது ஒவ்வொன்றும் ஒரு புதிய இனிய அனுபவம் தருவதை உணர்வீர்கள். ஒருவேளை, இவற்றில் ஏதாவதொரு உறவில் குறை இருக்குமானால் அதை மற்ற மனிதரிடம் தேடுவீர்கள். அப்படியானால் இது சரியானதாக இருக்குமா? இருக்காது. இது தவறானது. ஏனெனில் கடவுள் ஒருவரைத் தவிர வேறு யாரும் நிபந்தனையற்ற தொடர்ச்சியான அனுபவம் செய்விக்க முடியாது. ஆகையால் கடவுளுடன் நீங்கள் வைத்துக் கொள்ளும் சம்மந்தத்தை வெறும் மேலோட்டமானதாக, அறிவு பூர்வமானதாக மட்டுமே வைப்பதில் திருப்தியடைந்து விடாதீர்கள். இதில் திறந்த மனதுடன் சாத்தியமான அனைத்து அனுபவத்தையும் பெறுவதற்கு முடிந்த அளவு ஆழமாகச் சென்று அனுபவம் செய்யுங்கள்.

# டிரஸ்டி நிலை

பி.கு.பாலாஜி, புதுக்கோட்டை



கோட்டையூர் என்ற மிகப் பெரிய தேசத்தின் மன்னன் மித்ரவர்மன். தானம், தர்மங்களில் சிறந்து விளங்கிய அவர் துறவிகள் மற்றும் சான்றோர்களையும் நன்றாக மதித்து நடந்து வந்தார். ஒருநாள் இரவு அவரது அரண்மனைக்கு துறவி ஒருவர் வருகிறார். இந்த நேரத்தில் துறவியா? என்ற கேள்வியுடன் அவரைப் பார்க்க கொலு மண்டபத்திற்கு வருக்கிறார் மன்னர் மித்ரவர்மன். துறவிக்குச் செய்ய வேண்டிய மரியாதைகளை செய்து முடித்த பின் உங்களுக்கு என்ன வேண்டும் சாமி? என்று கேட்கிறார் மன்னர். இன்று இரவு உனது விடுதியில் நான் தங்கிச் செல்ல அனுமதி வேண்டும் என்கிறார் அந்த துறவி.

அரண்மனையை விடுதி என்று அந்தத் துறவி மிகவும் சாதாரணமாக கூறியதைக் கேட்டதும் மன்னருக்கு கோபம் வருகிறது. என்றாலும் மிகப் பணிவுடன் அந்தத் துறவியிடம் என்ன சுவாமி, என் அரண்மனையை விடுதி என்கிறீர்களே? என்று கேட்கிறார். உடனேயே மன்னரைப் பார்த்து அந்தத் துறவி இப்படி கேட்கிறார்: உனக்கு முன் இந்த அரண்மனையில் யார் இருந்தது?

என் தந்தை தான் இராஜாவாக இந்த அரண்மனையில் இருந்தார் என்கிறார் மன்னர். சரி அதற்கு முன் இந்த அரண்மனையில் யார் இருந்தார்? என்று துறவி கேட்க, என் தாத்தா மன்னராக இந்த அரண்மனையில் வாழ்ந்தார் என்று பதில் சொல்கிறார் மன்னர். சரி, உனக்குப் பிறகு இந்த மாளிகையில் யார் இருப்பார்? என்று துறவி கேட்கிறார். அதற்கு மன்னர் இதில் என்ன சந்தேகம், எனக்குப் பிறகு பிறக்கப் போகும் என் மகன் தான் மன்னனாக முடிசூட்டிக் கொண்டு இங்கு இருப்பான் என்று கூறுகின்றார்.

துறவி வாய்விட்டு சிரித்தபடி இந்த மாளிகையில் சிறிது நாட்கள் உனது தாத்தா இருந்தார், பிறகு அவர் போய்விட்டார். அதன் பிறகு உனது அப்பா இருந்தார், அவரும் போய்விட்டார். இப்பொழுது நீ இருக்கிறாய், நீயும் சிறிது காலத்தில் சென்று விடுவாய். உனக்குப் பின்னால் உன் மகன் இருக்கப் போகிறான். இப்போது சொல் - விடுதி என்பது என்ன? சிறிது நாட்கள் ஒருவர் வந்து தங்கிச் சென்ற பின், வேறு ஒருவர் வந்து தங்கும் இடம் தானே! என்று கூறுகிறார் துறவி.

மன்னர் மித்ரவர்மனுக்கு யதார்த்தமான ஞானம் புரிய வைக்க விரும்பிய துறவி, மன்னரிடம் - ஒரு மாட்டுக்காரனுடன் அவனது மாடும் வந்து கொண்டிருந்தது. கயிற்றின் ஒரு முனையை மாட்டுக்காரன் தன் கையில் பிடித்திருந்தான். மாட்டை மனிதன் பிடித்திருக் கிறானா? அல்லது மாடு மனிதனைப் பிடித்திருக் கிறதா? மாடு மனிதனிடம் அகப் பட்டிருக்கிறதா? அல்லது மனிதன் மாட்டிடம் அகப்பட்டிருக் கிறானா? என்று துறவி கேட்கிறார். இது அனைவருக்கும் தெரிந்த விசயம் தானே! மனிதன் தான் மாட்டை பிடித்து வைத்திருக் கிறான். எனவே மாடு தான் மனிதனிடம் அகப்பட்டிருக்கிறது என்றார் மன்னர்.

அதற்கு அந்த துறவி அந்த மாடு கயிற்றை அறுத்துக் கொண்டு ஓடினால் மனிதன் என்ன செய்வான்? என்று கேட்டார். அதற்கு மன்னர் அந்த மாட்டைப் பிடிக்க அதன் பின்னே ஓடுவான் என்றார். இந்த நிலையில் மாடு

மனிதனிடம் அகப்பட்டுள்ளதா? அல்லது மனிதன் மாட்டிடம் அகப்பட்டுள்ளானா? என்று மீண்டும் கேட்டார் துறவி.

மன்னர் சற்று சிந்திக்கத் தொடங்கினார் - மனிதன் கயிற்றை விட்டு விட்டு ஓடினால் மாடு அவன் பின்னே ஓடாது. ஆனால் மாடு கயிற்றை அறுத்துக் கொண்டு ஓடினால் மனிதன் கட்டாயம் அதன் பின்னே ஓடுவான். அகப்பட்டிருப்பது யார்? மாடா? மனிதனா? உண்மையில் மனிதன், மாட்டின் மீது ஆசை கொண்டுள்ளான். அதை விட்டு விட அவனால் முடியாது. இப்படித் தான் மனிதன் உலகம் மற்றும் உலக சாதனங்களின் பிடியில் அகப்பட்டுள்ளான், ஆனால் சாதனங்கள் தான் அவன் பிடியில் இருப்பதாக நினைத்துக் கொள்கிறான் மனிதன் என்று கூறி மன்னருக்கு பிரமை எது? யதார்த்தம் எது? என்று புரிய வைத்தார் துறவி.

பாபா கூறுகின்றார் - இனிய குழந்தைகளே! நீங்களும் இந்த உலகத்தில் வழிப்போக்கர்களாக வந்தீர்கள். ஆனால் வந்த இடத்தில் நான், எனது என்ற பந்தனங்களில் மாட்டிக் கொண்டு தங்களது அமைதியான, மகிழ்ச்சியான, சுகமான வாழ்க்கையை தொலைத்து விட்டீர்கள். மீண்டும் ஜீவன்முக்தியின் அனுபவம் செய்ய வேண்டுமெனில் நான் டிரஸ்டியாக இருக்கிறேன், பாபா எஜமானாக இருக்கின்றார். உடல், மனம், பொருள் அனைத்தும் பாபாவினுடையது, அவைகளை பாபா எனக்கு அடமானமாக கொடுத்திருக்கின்றார் என்று நினையுங்கள்.



# வியாதி பற்றி புரிதல்

சரீரம் நோய் வாய்ப்படுவது என்பது இயல்பான ஒன்று தான். என்றாலும் உடல் ரீதியாக வியாதி பற்றி மட்டுமே சிந்திக்காமல் ஆன்மீக ரீதியாகவும் சிந்தனையில் ஈடுபடுங்கள். அப்போது பாதிப்பிலிருந்து விடுபட்டிருக்கும் அனுபவத்தை உணர்வீர்கள். உடல் நோய்வாய்ப்படுவதற்கு முன் வினைப்பயனும் காரணமாக இருக்க முடியும். இது கர்மத்தின் சட்டமாக உள்ளது. அதாவது ஒருவருடைய இன்றைய நிலைக்கு, நேற்றைய செயலும் காரணமாக முடியும் என்பதாகும். இந்த செயல் என்பது சமீப காலத்தில் செய்ததாகவும் இருக்கலாம், வெகு நாட்களுக்கு முன்பு செய்ததாகவும் இருக்கலாம். இவ்விதமாக காரணத்தை ஒப்புக் கொண்டு விட்டால், மனம் சஞ்சலமடையாது. எப்போதும் போல், சிந்தனை கடவுளைப்பற்றியதாக ஆகிவிடும். நினைவு செய்வதும் இயல்பாகி விடும். இதன் மூலம் இயற்கையாகவே குணமடைவதில் கடவுளின் ஆசிகளும் உடனிருக்கும். இது சரியான அணுகுமுறை. இதற்கு மாறாக, சிந்தனை இருக்குமானால், மடுவைப் போன்ற பாதிப்பை மலைபோலாக்குகிறோம் என்பதாகும்.

ஆன்மீக ரீதியான புரிதல் என்பது வருங்காலத்தை ஆரோக்கியமானதாக வைத்துக் கொள்வதற்கு உத்தரவாதமுள்ளதாகும். ஏனெனில் நல்ல எதிர் காலத்திற்கு நற்கர்மங்களையே செய்ய வேண்டும் என்ற புரிந்துணர்வைக் கொடுப்பதாக இருக்கின்றது என்பது தான்.

உதாரணமாக உங்கள் உடல், மனம், மற்றும் பொருளை சமூக சேவையில் பயன்படுத்தும் போது மகிழ்ச்சியாக இருப்பதை உணர்கிறீர்கள். மாறாக உங்கள் சக்தி எதிர்மறையில் பயன்படுத்தப் படும்போது மகிழ்ச்சி இருப்பதில்லை. ஏனெனில் இதன் பயன் மனதில் பாதிப்பை உண்டாக்குவதாக இருக்கிறது என்பது தான்.

# வீணான சிந்தனை என்ற வலையிலிருந்து விடுபட்டு பிரபுவின் சந்திப்பில் திளைத்திருங்கள்

(தமிழாக்கம்) பி.கு. சுந்தரராஜன், சென்னை



வீணான சிந்தனைகள் வீழ்ச்சியடையச் செய்யக்கூடியது, எனவே இதிலிருந்து விடுபட்டிருக்க வேண்டும். ஏனெனில் வீணான எண்ணங்கள் நமக்கே நஷ்டத்தை ஏற்படுத்துவ தோடு நாம் வசிக்கும் வீடு அல்லது சமூகத்தின் சூழ்நிலையும் கெட்டுப்போய்விடும். ஆகவே தான் சாதுக்கள், மகான் ஆத்மாக்கள் ஆத்ம சிந்தனை மற்றும் பிரபு சிந்தனையில் ஈடுபடும்படி அறிவுறுத்தினர், இதன் மூலம் வசிப்பிடம், சமூகம் சத்குணமுள்ளதாகவும், சுகம் நிறைந்ததாகவும் ஆகிவிடும்.

தேவையற்ற சிந்தனை புற்று நோய்க்கு சமம், உள்ளுக்குள்ளாகவே மனதை அழுகச் செய்து விடும். ஒருபோதும் சுகம் மற்றும் பரமானந்தத்தை அனுபவம் செய்ய விடாது. மேலும் பல பந்தனங்களில் கட்டுப்பட வைத்து விடும். நீண்ட காலத்திற்குப் பிறகே தவறை உணரும் போது வருத்தப்பட நேரிடும். இந்த வியாதியிலிருந்து குணமடைய வேண்டுமானால் **மன்மனாபவ** என்ற மந்திரத்தின் மருந்தூசி போட்டுக் கொள்ள வேண்டும். நாள் தோறும் ஞான ரத்தினங்களைக் கேட்டு கேட்டு, பயன் பாட்டில் கொண்டு வரும் போது வீணான சிந்தனை என்ற தீரா வியாதியிலிருந்து விடுபட்டு பிரபு சந்திப்பின் ஆனந்தம் அனுபவமாகும்.

வீணான சிந்தனை விஷம் போன்றது, மனிதர்களை மயக்க மடையச் செய்து விடும், குழப்பமடையச் செய்து வீழ்ச்சியின் பக்கம் கொண்டு சென்று விடும், முயற்சியில் பலவீனமடையச் செய்து விடும். ஆத்மா மன அமைதியை இழந்து விடும். பேச்சில் கட்டுப்பாடு இருக்காது. மற்றவர்களின் குப்பையை தன்னுள் சேர்த்துக் கொள்கின்றனர். இப்படிப்பட்ட ஆத்மாக்களிடம் பரமாத்மாவின் நினைவு ஒரு நொடிப்பொழுது கூட இருக்காது, மனமும் ஒரு முக நிலைப்பாட்டில் இருக்க முடியாது. அவர்கள் ஸ்ரீமத்திற்கு எதிர் மாறாக நடந்து அவமரியாதை செய்வதால் மேலும் விகர்மங்களை செய்கின்றனர். இதன் காரணமாக ஏமாற்றத்தை அடைகின்றனர். அமைதியை இழந்து விடுகின்றனர்.

வீணான சிந்தனையாளர்கள் தங்களது தவறை உணர்வதில்லை. தவறுகளை மற்றவர் முன் சரியென வாதாடுவர், கேட்பவர்களும் மௌனமாகி விடுவார்கள். தான் செய்யும் அநீதி, நியாயமற்ற, பொய்யான செய்கைகளுக்கு அல்பகாலத்திற்கு வெற்றியடைந்து விட்டதாக பெருமிதம் கொள்வார்கள். இம்மாதிரியான விஷயங்களில் கை தேர்ந்தவர்களாக இருப்பார்கள். மற்றவர்கள் முன் தான் மகிழ்ச்சியாக இருப்பதாக மாய தோற்றத்தை காண்பிப்பார்கள். அவர்களின் தவறுகள் ஒரு சமயத்தில் பூதாகாரமாக உருவெடுத்து அவர்கள் முன் நிற்கும், ஆத்மா உள்ளூர துடிக்கும், வாழ்க்கையில் சத்திய தன்மை, தெய்வீகத் தன்மை, குளிர்ந்த நிலை இவற்றின் நறுமணம் வெளிவராது. இலட்சியத்தை நோக்கி அலைந்து இருளடைந்த வழிகளில் சென்று ஏமாற்றமடைவார்கள்.

வீண் சிந்தனை என்ற புழு நாலா புறங்களிலும் பரவி மற்றவர்களையும் நோயாளிகளாக மாற்றிவிடும். அந்த வியாதி எளிதாக மற்றவர்களுக்குத் தொற்றி விடும். உதாரணமாக ஒரு மரம் அல்லது செடியில் ஒரு

வகை புழு அரிக்க ஆரம்பித்து விட்டால் மெது மெதுவாக மரம் முழுவதும் காய்ந்து பட்டுப் போய்விடும். அதேபோல தேவையற்ற நஷ்டத்தை ஏற்படுத்தி பாவக் கணக்கை அதிகரிக்கக் கூடிய எண்ணங்கள் ஆன்மீக வாழ்க்கை யிலிருந்து விலக்கி, ஈஸ்வரிய வழிப்படி நடப்பவர்களை வழிமாறச் செய்து பாதிப்பை ஏற்படுத்தும்.

வெளிநாட்டில் ஒரு பேராசிரியர் தினமும் தனது கல்லூரிக்குச் செல்லும் போது குறுக்கு வழியில் ஒரு அழுக்கான சந்து வழியாக செல்வாராம். அங்கு வசிப்பர்களின் வார்த்தை களும் தலைகீழ், நடத்தையும் அதுபோலவே இருக்குமாம். நல்ல மனிதர் ஒருவர் இவருக்கு இவ்வழியைத் தவிர்த்து மெயின் ரோடு வழியாகச் செல்லுமாறு அறிவுறுத்தினாராம். ஆனால் அவரோ இங்கு வசிப்பர்கள் நடத்தை யால் நான் பாதிப்படைவதில்லை என்று கூறி தொடர்ந்து அதே வழியில் சென்று வந்துள்ளார். சிறிது நாளில் பேராசிரியர் கடுமையான காய்ச்சலால் படுத்த படுக்கையாகி விட்டார். தன் நினைவிழந்த நிலையில் அவர் சென்று வந்த பாதையில் வசித்தவர்களின் வழக்கு மொழி (வார்த்தைகளை) உளறுவாராம். உறவினர்கள் மிகவும் ஆச்சரியப்பட்டனர். அவர் நிலை தேறிய பின் உடல் நலமில்லாமல் இருந்தபோது நிலை தவறியதைப் பற்றி விளக்கம் கேட்டபோது அவர் பாதிக்கப்பட்ட காரணத்தைக் கூறினாராம்.

அவர் காதில் விழுந்த தரங்கெட்ட வார்த்தைகள், அசுரத்தன நடத்தை முதலானவை தன்னுள் தன்னை அறியாமலே பதிந்து விட்டதைக் கூறினார். எனவே தான் பாபா கூறுகிறார் தீயவைகளைப் கேட்காதே, தீயவைகளைப் பார்க்காதே..... என்று. ஆகவே குழந்தைகள் எச்சரிக்கப்படுகின்றனர் - மனதை பாதிக்கும் இடங்களுக்கு செல்லக்கூடாது, வீணான செய்திகளை கூறுவோரிடம் பழக வேண்டாம். தன்னுடைய முன்னேற்றத்தைப் பற்றிய எண்ணமே சதா இருக்க வேண்டும். அதற்காக நியமித்தபடி முயற்சி மற்றும் சேவையில் ஈடுபட்டிருக்க வேண்டும். சிரேஷ்ட காரியங்களை செய்வதின் மூலம் ஆத்மா சக்திசாலி ஆகிவிடும்.

சுயசிந்தனை மட்டும் தான் பரசிந்தனை யிலிருந்து விடுபடக் கூடிய ஒரே வழியாகும். சுய சிந்தனையாளர்கள் எப்போதும் தனது தெய்வீக மற்றும் மனோபலத்தை மேலும் வளப்படுத்திக் கொள்வார்கள். அவர்களது சக்தி வீணாவதில்லை. மேலும் சுய சிந்தனையால் ஆன்மீக சக்தியும் அதிகரிக்கிறது. அவர் களுடைய எண்ணம், சமயம், சக்தி சாலியாகவும் வெற்றி அடைகிறது, இதனால் பல முடியாது எனக்கூடிய காரியங்களும் கூட முழு வெற்றி அடைகின்றன.

## சகிப்புத் தன்மையால் அடையும் பலன்

பச்சை மண் பாண்டம் உபயோகத்திற்கு முன் சூளையில் வைத்து சூடேற்றப்படுகிறது. அந்தப் பாண்டம் முற்றிலும் சூடாகும் வரை சூட்டை சகித்துக் கொண்டிருக்கிறது. இதன் பின்னரே, மண் பாண்டம் குளிர்ந்த நிரைத் தேக்கி வைக்கத் தகுதியுடையதாகிறது. இதைப்போல யோக அக்னியின் மூலமே கர்மேந்திரியங்கள் சீதள மடைகின்றன. இதன் பயன் ஒருவரிடம் நல்லெண்ணமும் பேச்சில் இனிமையும், காரிய விவகாரத்தில் சிறந்த அணுகுமுறையும் திருப்தியும் அமைவது சாத்தியமாகிறது.

தகாத வார்த்தைகளை ஒருவர் பேசுகின்றார் என்றால், அவர் கல்லெறிந்து கொண்டிருக்கிறார் என்பதாகும். காயம் படாமலிருக்க, அங்கிருந்து விலகிச் செல்லுங்கள்.



# எதிர்பார்ப்பு

பி.கு. பத்மபிரியா, லாஸ்ஐஞ்சல், கனடா

நாம் எல்லோருமே மற்றவர்களிடம் ஏதோ ஒன்றை எதிர்பார்க்கிறோம். சிலர் தன் பொறுப்பு களை, கடமைகளை சிறப்பாக நிறை வேற்ற வேண்டும் என எதிர்பார்க்கிறோம். உதாரணமாக பாதுகாப்பிற்காக நியமிக்கப்பட்டுள்ள காவலர் அவர் வேலையில் கவனமாக இருந்து பாதுகாப்பை உறுதிபடுத்த வேண்டும் என்பது எதிர்பார்ப்பு. அதாவது பொறுப்புணர்வுடன் இருக்க வேண்டும் என்பது தான் எதிர்பார்ப்பு. இப்படி எதிர்பார்ப்பது என்பது சரிதானா? என்றால் சிந்திக்க வேண்டியுள்ளது.

ஒருவகையில் இந்த எதிர்பார்ப்பு சரி தான். ஏனெனில் எதிர்பார்ப்பது என்பது பொறுப்புணர் வின் வெளிப்பாடாகும். ஒருவர் நியமிக்கப்பட்ட காரியத்திற்கு அவர் தான் பொறுப்பு. ஆகவே அவர் அவரின் கீழ் உள்ளவர்கள் சரியாக செய்ய எதிர்பார்க்கின்றார். இதில் தவறு இல்லை. உதாரணமாக நுகர்வோர் பாதுகாப்பு மையத்தில் இருப்பவர் சில பொறுப்புகளை வகிக்கின்றனர். நுகர்வோரின் நலன் பாதுகாப்பது, உதவி செய்வது, அவர் வேலை. இதைத்தான் அவரிடம் எதிர்பார்க்கிறார்கள் மக்கள்.

இந்தமாதிரி எதிர்பார்ப்பது நடந்தேறாமல் போய்விட்டால் ஏமாற்றம், மனச்சோர்வு ஏற்படுகிறது. எதிர்பார்ப்பது என்னவோ சரிதான். ஆனால் விரும்பியது நிறைவேறாவிட்டால் மனமுடைந்து போவது என்பது சரியா? இதிலிருந்து பாதுகாத்துக் கொள்வது எப்படி?

### அளவுக்கு மீறிய எதிர்பார்ப்பு:

உதாரணமாக ஒரு மாணவன் நன்றாகப் படிக்க வேண்டியது அவனுடைய கடமை. ஆனால் அவருடைய பெற்றோர்கள் எதிர் பார்ப்பது இவன் எப்போதும் படித்துக் கொண்டே யிருக்க வேண்டும், மாநிலத்திலேயே முதன்மை யாக வரவேண்டும் என்பதற்காக அந்த மாணவரை சில வேளைகளில் கட்டாயப் படுத்து வதிலும் ஈடுபடுத்துவதால் ஏற்படும் பலன் என்ன? அவ்வாறு இந்த மாணவன் முதல் இடத்திற்கு பதில் இரண்டாவது இடத்தில் வந்தால் பெற்றோர்கள் அதை எவ்வாறு ஏற்பார்கள்? அவர்களின் மன நிலை என்ன வாகும்?

இந்த மாதிரி எதிர்பார்ப்பு என்பது வரைமுறையில்லாமல் போய் நம்முடைய பேராவலில் கலந்து விட்டால் அதுவே அளவுக்கு மீறிய எதிர்பார்ப்பாகி விடுகிறது. மற்றவருக்கு மன இறுக்கத்தைக் கொடுத்துவிடுகிறது. ஒருவரின் ஆவல் தான் எதிர்பார்ப்பாக மாறுகிறது. ஒருவர் தான் அதிக நெருக்கடிக்கு உள்ளா கிறோம் என எண்ணும் போது உறவு முறையில் மகிழ்ச்சிக்குப் பதிலாக விரிசல் ஏற்பட்டு விடும்.

என்னதான் கடினமாக உழைத்தாலும் மற்றவர் திருப்தி அடையவில்லை என்றால் புகார் அல்லது குறை கூறிக்கொண்டேயிருக்கிறார் என்று தான் எண்ணத் தோன்றும்.

### தவறான எதிபார்ப்பை தவிர்த்தல்:

ஒவ்வொருவருக்கும் ஏதோ ஒரு வகையில் பொறுப்பு இருக்கும். ஆனால் கூடவே அவர்களுக்கான திறமை அல்லது சக்தி வேறுபடும். பொறுப்பு ஒரே மாதிரியாக இருந்தாலும் நிறைவேற்றக்கூடிய திறமையில் வித்தியாச மிருக்கும். உதாரணமாக மருத்துவர் என்பவருக்கு நோயை குணப்படுத்தக்கூடிய பொறுப்புண்டு. ஆனால் ஒவ்வொரு மருத்துவருக்கும் சில விசயங்களில் கை

தேர்ந்தவராகவும், சிலவற்றில் குறைவாகவும் இருக்கலாம். இங்கு கையாள்வதிலும், குணப் படுத்துவதிலும், திறமையிலும் வேறுபாட்டை காணமுடிகிறது. இதற்காக அவர் திறமை அற்றவர் என்றோ அல்லது நல்ல மருத்துவர் என்றோ உறுதி செய்ய முடியாது?

உடனடியாக நிவாரணமளிக்க வேண்டும் என்று விரும்புகிறோம். நோயின் தரம், அளவால் எண்ணியபடி நடக்கவில்லை என்றால் ஏமாற்றம். விரைவாக குணமடைய வேண்டும் என்ற நோக்கத்தால் எதிர்பார்ப்பு என்பது ஏற்படுகிறது.

ஒருவருடைய திறமையைப்பற்றி தெரிந்திருந்தாலும் அதையும் மீறி விருப்பம் என்பது ஏற்படுகிறது. தந்தைக்குத் தெரியும் தன் மகன் அல்லது மகளின் விருப்பம் பொறியாளரா வது என்று, இருந்தாலும் தந்தையின் விருப்பம் மருத்துவம் படிக்க வேண்டும் என்பது. மெது மெதுவாக ஆசை வளர விருப்பம் என்பது எதிர்பார்ப்பாக ஆகிவிடுகிறது, அதுவே வற்புறுத்தலாகவும் மாறிவிடுகிறது.

ஒரு தொழிற்கூடம் அல்லது உற்பத்தி செய்யக்கூடிய சூழ்நிலையில் உள்ள மேலதிகாரி நிர்ணயிக்கப்பட்ட தேதிக்குள் இலக்கை அடைய வேண்டும் என்ற நோக்கத்தில் எதிர்பார்ப்பை சற்று கூடுதலாக்கி பணிபுரிவோரிடம் கூறலாம், அதுவே சமயத்தில் வற்புறுத்தவும் கூடும்.

இதுபோலவே இல்லற சூழ்நிலைகளிலும் ஏற்பட வாய்ப்புண்டு. தினசரி வாழ்க்கையில் தேவைக்கேற்ப மனதில் அழுத்தம் ஏற்படுவது இயல்பு. அது மட்டுமல்லாமல் நிறைய பொருட்கள் வாங்க வேண்டும், மற்றவர்களோடு ஒப்பிடும் போது தான் ஒன்றும் ஏழ்மையில் இல்லை, வெளிப்பகட்டுக்காக நண்பர்களிடமோ, சமுகத்திற்கு முன்பாகவோ தான் உயர்ந்த நிலையில் (இமேஜ்) இருப்பதாக காட்டிக் கொள் வதற்கு அதிக வருமானத்தின் தேவைக்காக தானே மன இருக்கத்தை உருவாக்கிக் கொள்கின்றனர்.

இதிலிருந்து விடபட சில விசயங்களை கீழ்கண்டவாறு சோதனை செய்துப் பார்க்கலாம்?

1. நான் யாரிடமாவது எந்தவொரு சூழ்நிலையிலாவது வற்புறுத்தி எதையாவது எதிர்பார்க்கின்றேனா?

2. அவ்வாறாயின் அதன் பின்னனி என்ன? மனதில் ஆவலின் தூண்டுதலா?

3. என்னிடம் அளவுக்கு மீறிய எதிர்பார்ப்பு கள் உள்ளனவா?

4. குறைந்தளவிலாவது எதிர்பார்த்தது நிறைவேறாவிட்டால் மனமுடைந்து போகிறேனா? நிறைவேறவில்லையெனில் ஏற்றுக் கொள்ளும் மனப்பாங்கை உண்டாக்கிக் கொள்ள முடியுமா?

5. என்னுடைய பொறுப்பை உணர்கின்றேனா?

இக்கேள்விகளின் மூலம் என்னுடைய விருப்பம், எதிர்பார்ப்பு, பொறுப்பு ஆகியவற்றை புரிந்து கொள்வதுடன் மற்றவர்களின் மனதையும் அறிந்து அமைதியான வாழ்க்கையை வாழ்வதற்கான நடைமுறையை எளிதாக மாற்றிக் கொள்ள முடியும். வாழ்க்கை என்பது அமைதியாக வாழ்வதற்கே! வாழ்க்கை என்பது சந்தோஷமாக வாழ்வதற்கே! இந்த எதிர்பார்ப்புடன் வாழ்வோம்! வாழ்வோம்!

நாம் நம்மைச் சுற்றிலும் பலவிதக்காட்சிகளைக் காண்கிறோம். காட்சிகள் பலவாறாயினும் நாம் ஒவ்வொருவரும் படைப்பு எனும் மரத்தின் பல இலைகளைப் போன்றவர்கள் தான். இலைகள் பலவாயினும் இதற்கு ஆதாரமாக இருக்கின்ற விதை ஒன்று தான்.



**ஓம் சாந்தி 7-4-2015**

**மரியாதைக்குரிய மூத்த சகோதரர் இராஜயோகி பி.கு. இரமேஷ்ஜி, மதுபன் அவர்களின் விசேஷ அறிவிப்பு பற்றிய கடிதம்.**

**ஜூன் மாதம் 21ஆம் நாள் சர்வதேச யோகா நாள் என்ற அறிவிப்பாகும்.**

இந்த நாள் விசேஷ நாள் ஏனெனில் வட கோளத்தில் எல்லாவற்றையும் விட நீண்ட நாள் என்றும், தென் கோளத்தில் எல்லாவற்றையும் விட மிகச்சிறிய நாள் எனவும் கூறப்படுகிறது.

1. மதுபன் மேனேஜ்மென்ட் கமிட்டி மீட்டிங்கில், ஜூன் மாதம் 21ஆம் நாளை சர்வதேச யோகா நாள் Inter National yoga Day இந்த நாளை மிக நல்ல முறையில் விசேஷமாகக் கொண்டாட வேண்டும் என்று தீர்மானிக் கப்பட்டுள்ளது.

2. சமீபத்தில் ஆஸ்திரேலியாவில் ஜி-20 மாநாடு கூட்டப்பட்டிருந்தது. அம்மாநாட்டில் உலகளவில் முக்கியமான 20 நாடுகள் பங்கு பெற்றிருந்தன. அப்போது நமது பாரதப் பிரதமர் மாண்பு மிகு திரு. நரேந்திரமோடி அவர்கள், ஜூன் மாதம் 21ஆம் நாளை சர்வதேச யோகா நாளாக கொண்டாடலாம் என விண்ணப்பம் செய்தார். இதனை அனைவரும் ஒரு மனதாக ஏற்றுக் கொண்டனர். பின்னர் இந்த தீர்மானம் ஐ.நா சபையிலும் நிறைவேற்றப்பட்டது. மேலும் இத்தீர்மானத்தை 150 நாடுகளுக்கும் மேல், ஏற்றுக் கொண்டு, சர்வதேச யோகா நாளாக ஜூன் மாதம் 21ஐ, அனுசரிப்பது என நிர்ணயம் செய்து விட்டனர்.

3 மரியாதைக்குரிய பி.கு. ரமேஷ்ஜி அவர்களும், விசேஷமாகக் கொண்டாட வேண்டும் என்பதைப் பற்றி ஸ்பார்க் மீட்டிங்கிலும் குறிப்பிட்டிருக்கின்றார். இதில் முக்கிய மாக நமது அன்பான பாபா விரும்புவதைப் போல, உலகிலுள்ள அனைவரும் யோகம் செய்ய வேண்டும் என விரும்புகின்ற அளவில், ஒரு தூண்டுதலாக இருக்கும் படியும், யோகம் செய்வதால் என்ன லாபம்? என்பது பற்றியும், எப்படிச் செய்வது என்பது பற்றிய விவரமும் அனைவருக்கும் கிடைக்கும்படியாக ஏற்பாடு செய்ய வேண்டும் எனவும் கூறியிருக்கின்றார்.

4. இதன் மூலமாக, அனைவருக்கும் சர்வதேச யோகா நாளின் முக்கியத்துவம் பற்றி முக்கியமான பத்திரிகைகளிலும் கட்டுரை மூலமாகப் பிரசுரிக்க வேண்டும். மேலும் ஹட யோகத்திற்கும், இராஜயோகத்திற்குமுள்ள வித்தியாசம் பற்றியும் தெளிவுபடுத்துவது நல்லது எனவும் குறிப்பிட்டிருக்கின்றார்.

இதுபற்றி ஜூன் மாதம் மீண்டும், சங்கமயுக இதழில் கவனம் கொடுக்கப்படும். சங்கமயுகம், இருமாத இதழாக பிரசுரமாவதால் குறிப்பிட்ட நாளில் வெளிவர தவறக் கூடாது என்பதற்காக, இந்த விபரம் இந்த முதலாம் இதழ் மூலமாக முன் கூட்டியே கவனத்திற்குக் கொண்டு வரப்படுகிறது.

# உலக யோக நாள் மற்றும் தேச நலன்

(தமிழாக்கம்) பி.கு. இரமேஷ்ஜி, மும்பை



ஐக்கிய நாடுகளின் (UNO) பொது சபையில் பாரதப் பிரதமர் திரு. மோடி அவர்கள், சர்வ தேச நலன் கருதி, ஒவ்வொரு ஆண்டும் உலக யோகா தினம் அனுஷ்டிக்கலாம் என்ற தனது விருப்பத்தை முன் மொழிந்தார். இதன் பிறகு இந்த விசயம் பற்றி, 20 நாடுகளின் பெருந் தலைவர்கள் கலந்து கொண்ட உச்சி மாநாட்டிலும் (G-20 Summit) முன் மொழிந்தார். பாரத நாட்டின் சார்பாகக் கொண்டு வரப்பட்ட இந்த நல்லெண்ணம் பற்றி அனைத்து நாடுகளின் தலைவர்களும் கலந்தாலோசித்து தங்கள் சம்மதத்தை தெரிவித்தனர். இதன் பிறகு ஒவ்வொரு ஆண்டும் ஜுன் 21ஆம் நாள் உலக யோகா நாள் எனக் கொண்டாடலாம் என்று தீர்மானிக்கப்பட்டது.

இந்தக் காரியமும் கூட ஒரு ஈஸ்வரிய அறிகுறியாக, சிவபாபாவின் காரியமாக இருக்கிறது என்றே எண்ணத் தோன்றுகிறது. பார்க்கப் போனால், ஜுன் 21ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை மேலும் இது இந்த மாதத்தின் மூன்றாவது ஞாயிற்றுக்கிழமையாகவும் இருக்கிறது. நமது ஈஸ்வரிய பரிவாரத்திலும் ஒவ்வொரு மாதமும் மூன்றாம் ஞாயிறு, சர்வதேச யோகா தினமாக அனுஷ்டிக்கப்படுகிறது. இதே விசயம் இப்போது சர்வதேச அளவில் அங்கீகரிக்கப் பட்டிருப்பது, ஒரு பெரிய விசயம் என்றே எண்ணத் தோன்றுகிறது.

பாபா ஞானத்தில் நமக்கு முக்கியமாக நான்கு வகையான பாடங்கள் உள்ளன. ஞானம், யோகம், தாரணை, சேவை. இந்த நான்கிலும் யோகம் மிக முக்கியமான பாடமாக உள்ளது. நமது தெய்வீக பரிவாரத்திலும் கூட அமிருத வேளை யோகம் மிக மகத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

இதுவரையிலும் நமது சகஜ இராஜயோகம் தெய்வீக பரிவாரத்தினருக்கு மட்டுமே நிச்சயிக் கப்பட்டதாக இருந்து வந்தது. பொதுவாக பாரத தேசத்தில் எல்லோருமே, ஏதோ ஒருவகையில் யோகம் செய்வதை பழக்கமாகக் கொண்டுள்ளனர். பாரத மக்கள் வாழ்க்கை நியதியிலும் சுலோகம் உள்ளது. யோக க்ஷேமம், பஹூம் யஹூம் என்றும் கல்வி நிறுவனங் களிலும் கூட யோகம் கர்மேசு, கௌஷல்யம் போன்ற சுலோகங்கள் இருப்பதைப் பார்க்க முடிகிறது. இப்போது யோகத்தை தெய்வீகமானது என்ற ரூபத்தில் ஏற்றுக் கொண்டிருக்கின்றனர். தற்காலத்தில் எப்படி கல்வி மற்றும் உடல் நலம் இரண்டையும் மிக அத்யாவசியமானதாகக் கருதுகின்றனரோ, அது போலவே யோகத்தையும் ஏற்றுக் கொண்டிருக் கின்றனர்.

1986-1987-ம் ஆண்டில் முன்னால் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்கள் புதிய கல்வி முறைத் திட்டத்தைக் கொண்டு வந்தார். அதில் யோகம் கல்வியில் ஒரு பாடமாகக் சேர்க்க ப்பட வேண்டும் என தீர்மானம் செய்யப் பட்டிருந்தது. அந்த யோகக் கல்வித்திட்டத்தில், கல்வி மூலமாக உலகியல் மற்றும் ஆன்மீகம் இணைந்த முன்னேற்றம் இருக்க வேண்டும். இத்தகைய பயனுள்ள வளர்ச்சி பரவலாகிவிட வேண்டும். இப்படித்தான் கல்வி இருக்க வேண்டும் என்பதாகும்.

இவ்விதமாக யோகத்திற்கு உலகளாவிய மகத்துவம் கிடைத்திருக்கிறது.

இதுபோலவே தொழில் நிறுவனங்களும் சமூக சேவை ரீதியில் யோகத்தின் மகத்துவத்தைப்

புரிந்து ஏற்றுக் கொண்டிருக் கின்றனர். இம்மாதிரியாக, யோகத்திற்கு உலகளாவிய மகத்துவம் கிடைத்துள்ளது. உலக வரலாறைப் பார்க்கும் போது, எதுவரையிலும் எந்த ஒரு மனிதனுக்கும், அரசு மூலமாக போதுமான உதவி கிடைக்கவில்லையோ, அதுவரையிலும், அவனுடைய நடவடிக்கைகள் தீவிர கதியில் நடைபெறுவதில்லை.

இந்த சமயத்தில் புத்த தர்மத்தைப் பற்றிய விசயம் நினைவுக்கு வருகிறது. புத்த தர்ம ஸ்தாபகரான கௌதம புத்தர் கயாவில் தவமிருந்தார். பின்னர் புத்த தர்மத்தைப் பற்றி பிரச்சாரம் செய்ய ஆரம்பித்தார். கதையில் இவ்வாறு சொல்லப்பட்டிருக்கிறது. அசோக சக்கரவர்த்திக்கு ஒரு தண்டனை கிடைக்க வேண்டியதாயிருந்தது. இதன்படி அவருக்கு சூரிய அஸ்தமனத்திற்கு முன்பு மரண தண்டனை நிறைவேற்றப்பட வேண்டும் என்பதாகும். சூரியாஸ்தமன நேரமாகிக் கொண்டிருக்கும் வேளையில் மணியோசை கேட்டது. அப்போது அசோக சக்ரவர்த்தியை மரண தண்டனையிலிருந்து விடுவிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் புத்த துறவி ஒருவர் வேகமாகச் சென்று அந்த மணி மீது அமர்ந்து கொண்டார். எப்போது ஒலி எழுப்பு வதற்காக மணி அசைக்கப்பட்டதோ, அப்போது இவரது சரீரம் அதிர்ந்ததே தவிர மணியோசை கேட்கவில்லை. அதற்குள் சூரியன் அஸ்தமனம் ஆகிவிட்டது. இதன் காரணமாக மரண தண்டனை நிறைவேற்றப்படாமல், அசோக சக்ரவர்த்தி தண்டனையிலிருந்து தப்பிவிட்டார். இதன் பிறகு இதன் காரணத்தை அறிந்த அசோகர் புத்த துறவியைத் தேடிச் சென்றார். சென்று துறவியைச் சந்தித்த போது, அந்தத் துறவி மரணப்படுக்கையில் இருந்தார். அவரைப் பார்த்து, துறவியின் கடைசி விருப்பம் என்ன என்று அசோகன் கேட்க, துறவி புத்த தர்மத்தை ஏற்றுக் கொண்டு அதைப் பரப்ப வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். இதன்படி அசோகன் புத்த தர்மத்தைத் தழுவினார். பிரச்சாரம் செய்தார், பரப்பவும் செய்தார். புத்த தர்மம் நாலாபுறமும் பரவியது. புத்த தர்ம நினைவுத் தூண்களை நிறுவினார். அநேக துறவிகளை புத்த மதப்பிரச் சாரத்திற்காக வெளி நாடுகளுக்கு அனுப்பினார். இம்மாதிரி அரசு அங்கீகாரம் பெற்ற காரணத்தால் புத்தமதம் உலகில் பரவலாகியது.

இதுபோலவே கிறித்துவ மதத்திற்கும் அரசு ஆதரவு கிடைத்தது. இதன் மத ஸ்தாபகர் ஏசு கிறிஸ்துவை சிலுவையில் அறைந்த சம்பவத் திற்குப் பின்னர் அவரது பரம சிஷ்யராக இருந்த செயின்ட் பீட்டர்ஸ் என்பவர் கிறித்துவ மதம் பரவலாவதற்கான முயற்சிகளை மேற்கொண்டார். இதற்காக இவர் அப்போதைய ரோம் சாம்ராஜ்யத் தின் அதிபதியைச் சந்தித்தார். அவர் கிறித்துவ மதத்தை தனது மதமாக ஆக்கிக் கொண்டார். இதனால் கிறித்துவ மதத்திற்கு ரோமன் கத்தோலி க்க மதம் என்ற ரூபத்தில் அங்கீகாரம் கிடைத்தது. ரோமாபுரி, இராஜ்யத்தின் சார்பாக, அருகாமையில் வாட்டிகன் சிட்டி உருவாக்கப் பட்டது. வாட்டிகனில் மத போதகர்களின் தலைமைப் பொறுப்பாளராக போப் இருக்கின்றார். அங்கிருந்துதான் கிறித்துவ மத சம்மந்தமான காரியங்களை நடத்திக் கொண்டிருக்கின்றார் இதன் மூலமாக, ஆரம்பத்தில் கிறித்துவ தர்மத்தின் காரிய விவகாரங்கள் ஜெரூசலத்தில் இருந்து வந்த போதிலும், ரோமாபுரி இராஜ்யத்தின் ஆதரவும், அங்கீகாரமும் கிடைத்த பிறகு கிறித்துவமதம் வேகமாகப் பரவியது. இவ்வாறாக தற்சமயம் உலகளவில் ஏறக்குறைய மக்கள் கோடிக் கணக்கில் கிறித்துவ மதத்தைச் சார்ந்தவர்களாக இருக்கின்றார்கள்.

மத ரீதியாகப் பார்த்தோமேயானால், பாரத கலாச்சாரத்தில் ஸ்ரீகிருஷ்ணர் மற்றும் கௌரவர், பாண்டவர்கள் அனைவருமே இராஜ வம்சத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கின்றார்கள். குருக்ஷேத்திர யுத்த மைதானத்தில் கீதை உபதேசம் செய்தபோது, அனைத்து இராஜாக் களும் இருந்தனர். மகாபாரதத்தில் 14 கீதைகள் பற்றிய மகிமை உள்ளது. அதில் பகவான் இதைத் தான்

உபதேசித்தார். அதாவது ஒரு சத்திய தர்மத்தை ஸ்தாபனை செய்யவும்,அதர்மத்தை அழிப்பதற்காகவும் நான் அவதாரம் செய்கிறேன் என்பதாக இருக்கிறது. உதாரணத்திற்கு ஸ்ரீகிருஷ்ணர் கம்சனை வதம் செய்து, இராஜ்ய அங்கீகாரத்துடன் தர்மத்தை ஸ்தாபனை செய்தார். அதாவது இராஜ்ய அங்கீகாரம் இருக்கும் போது எல்லாக் காரியங்களும் சுலபமாகவே நிறைவேறி விடுகிறது என்பதாகும்.

ரகு வம்சத்தின் இராஜாவான ஸ்ரீ இராமன் இராவணன், மாரீசன் போன்ற இராக்ஷசர்களை வதம் செய்தார். அதாவது பாரத கலாச்சாரத்தைப் பாதுகாப்பதற்காகவே யுத்தம் நடந்தது. இராமருடைய நண்பன் சுக்ரீவனும் கூட ஒரு இராஜா தான். இராமன் சுக்ரீவனுக்கு உதவி செய்வதற்காகவே, வாலியை வதம் செய்தார். அதாவது தர்மத்திற்கு இராஜ்ய அங்கீகாரம் கிடைத்தது என்பதாகும்.

பரமாத்மா மூலமாக ஆதிசனாதன தேவி தேவதா தர்மம் ஸ்தாபனை ஆகியது. கல்ப விருக்ஷத்தின் முதலாவது கிளை ஜியூ தர்ம ஸ்தாபகர் மோசஸ் பற்றியதாக இருக்கின்றது. இவர் தான் பரமாத்மாவின் பத்து கட்டளை களான ஆன்மீகம் பற்றிய பிரச்சாரம் செய்தார். மோசஸ் ஒரு ராஜகுமாரன். இவருக்கும் இவரது இளைய சகோதரன் ராம்சேக்குமிடையே முரண்பாடு உண்டானது. இதன் காரணமாக மோசஸ் தனது இராஜ்ய அதிகாரத்தை சகோதரனிடம் ஒப்படைத்துவிட்டு தனது ஜியூ தர்ம பிரச்சாரத்தில் ஈடுபடலானார். பின்னர் இவர் மக்களிடையே பிரசித்தமானார். அமெரிக்கன் அரசு யகூதிகளுக்கு எல்லா விதத்திலும் உதவி செய்தது போலவே, ஜியூ தர்மத்திற்கும் அரசு சார்பான அங்கீகாரம் கிடைத்தமையால், இந்த தர்மத்தின் காரிய விவகாரங்களும் நல்ல முறையில் நடைபெறலாயிற்று.

இஸ்லாம் தர்மத்தின் ஸ்தாபகரான அபிரகாம் ஒரு ராஜாவாக இருந்தார். இது கல்ப விருக்ஷத்தின் இரண்டாம் கிளையாக உருவானது. அபிரகாம் மூலமாக அநேகர் இஸ்லாம் தர்மத்தைச் தழுவினர். தற்காலத்திலும் கூட இஸ்லாம் தர்மத்தின் பேரில் அநேக மத உற்சவங்கள் நடந்து கொண்டிருக்கின்றன.

ஜைன தர்மத்தின் ஸ்தாபகரான மகாவீர் இராஜ குடும்பத்தைச் சேர்ந்தவராக இருந்தார். அவரும் கூட தனது இராஜ்யத்தைத் துறந்து, தவம் செய்வதில் ஈடுபடலானார். இவர் மூலமாக ஸ்தாபிக்கப்பட்ட இராஜ்யத்தில், இவர் ஜைன தர்மத்தைப் பரப்பினார். இராஜ்ய அங்கீகாரமும் கிடைத்தது. தென் இந்தியாவில், இவரது முயற்சியின் பலனாக சரவணபெலகுலாவில், ஜைன மத மூர்த்தி ஸ்தாபனை ஆகியது. இந்த மூர்த்திப் பற்றிய வரலாற்றில் காரணம் இவ்வாறாக உள்ளது. அதாவது இரண்டு சகோதரர்கள் இராஜ்ய சிம்மாசனத்திற்காக வாதாடிக் கொண்டிருந்தார்கள். இச்சமயத்தில் பிரச்சனை அதிகமாகி விட்டது. இதன் காரணமாக மூத்த சகோதரன் ரிஷிபவ தேவ் என்பவர், அதிகாரத்தை இளைய சகோதரனுக்கு விட்டுக் கொடுத்தார். இவர் ஜைன மத பிரச்சாரத்தில் ஈடுபாடு கொண்டவரானார். இவருடைய ஞாபகார்த்தமாக மிகப் பெரிய மூர்த்தி வடிவமைக்கப்பட்டது. இது தற்சமயம் தீர்த்தங்கரர் என்ற பெயரில் பிரசித்த மாக உள்ளது.

அபுவில் உள்ள தில்வாடா கோவிலும் கூட இராஜ்ய அங்கீகாரத்தின் ஆதாரத்திலேயே உருவாக்கப்பட்டது. அந்த சமயம் குஜராத்தில் விமல்ஷா என்பவர் பிரதான அமைச்சராக இருந்தார். இதன் பிறகு வஸ்துபால் மற்றும் தேஜ்பால் ஆகியோர் இராஜாவின் முக்கிய அமைச்சர் மற்றும் சேனாதிபதியாக இருந்தனர். இவர் தில்வாடா கோவிலை நிறுவினார். அபு அப்போது குஜராத் மாநிலத்தைச் சார்ந்ததாக இருந்தது. ஆதலால் குஜராத் இராஜாவின் சம்மதத்தின் பேரிலேயே தில்வாடா கோவில் கட்டப்பட்டது. இவர் ஆரவல்லி மலைத்தொடரில் சாலை வசதிகளை உண்டாக்கி, யானை மற்றும் குதிரைகள் மூலமாக கட்டுமானத்திற்கு வேண்டிய

சாமான்களைக் கொண்டு வந்து சேர்ப்பித்தார். மேலும் கட்டிட வேலைக்கான ஆட்களும் அங்கிருந்துதான் அனுப்பப் பட்டனர். இவ்விதமாக தில்வாடா கோவில் திட்ட மிட்டபடி, கட்டி முடிக்கப்பட்டது.

ஜப்பானில் ஷிண்டோ தர்மமும் கூட இராஜய அங்கிகாரத்துடன் ஸ்தாபிக்கப்பட்டதாகும். தர்ம காரியங்கள் அனைத்தும் இராஜ்ய அதிகார ஆதரவுடனேயே நடைபெற்றது.

சீக்கிய தர்ம ஸ்தாபகரான குருநானக் தேவ் இராஜ குடும்பத்தைச் சார்ந்தவராக இருக்கவில்லை.

பாரத தேச வரலாற்றில், அசுரர்களைப்பற்றிய சரித்திரம் வெகுவாக உள்ளது. இராவணன் ஒரு இராஜா. பலி ஒரு இராஜா. பலியை வதம் செய்வதற் காக வாமன அவதாரமும் இரண்ய கசிபுவை வதம் செய்வதற்காக நரசிம்ம அவதாரம் எடுத்ததாகவும் கதை உள்ளது. மேலும் பக்த பிரஹலாதன், பக்த துருவன் ஆகியோர் இராஜ குமாரர்கள் ஆவர். இவர்கள் அதர்மத்தின் அழிவுக்குக் காரணமாக இருந்தவர்கள்.

மகாபாரதத்தில், கலியுகம் எப்படி உருவானது என்பது பற்றிய விவரம் உள்ளது. மகாபாரதத்தில் நள மகாராஜா பற்றிய கதை இவ்வாறாக உள்ளது. கலியுகம் சிருஷ்டியில் நுழைவதற்கு முன்பாக, நளன் சுற்றிக் கொண்டேயிருந்தார். பிறகு ஒரு நாள் திடீரென சிறுநீர் கழிக்கச் சென்றார். வந்தார் ஆனால் கை கழுவாமல் வந்து விட்டார். அந்த சமயத்தில் அவரில் கலி நுழைந்து விட்டது. இம்மாதிரியாக கலியுகம் உருவானது என்பதாக உள்ளது. இராஜா அரிச்சந்திரன் மற்றும் இராஜா ஜனகர் ஆகியோர் மிகவும் தார்மீக வாதிகளாக இருந்தனர். ஆதலால் இவர்கள் காலத்தில் தர்மத் திற்கு இராஜ்ய அங்கீகாரம் எளிதாகவே கிடைத்தது.

தற்காலத்தில் 52 தேசங்களில் இஸ்லாம் தர்மத்திற்கு இராஜ்ய அங்கீகாரம் கிடைத்துள்ளது. கிரேட் பிரிட்டனில் சர்ச் ஆஃப் இங்லேண்டு, முக்கிய இராஜாவாக இருக்கின்றார். தற்சமயம் அமெரிக்க ஜனாதிபதி திரு பராக் ஒபாமா பிறப்பில் முஸ்லீம். ஆனால் பின்னர் கிறித்துவ மதத்தைத் தழுவிக் கொண்டார். இதன் காரணமாக இவருக்கு கிறித்துவ மதத்தின் ஆதாரத்தில் மிகுந்த வழிகாட்டுதல் கிடைத்தது. இவ்வாறாக அவர் அமெரிக்க ஜனாதிபதி ஆனார். இதே போல பாரத தேசத்தில் மொகலாயர் கள் ஆட்சி இருந்த போது தங்களுடைய தர்மத்தைப் போதித்ததோடு, அநேக மசூதிகளையும் நிறுவினார்கள். இதெல்லாம் நாம் அறிந்ததுதான். மேலும் பாரதத்தில், மதுரா மற்றும் துவாரகை ஆகிய முக்கிய தர்ம ஸ்தலங்களிலும் அவர்கள் மசூதி களைக் கட்டினார்கள். இதன் பிறகு இங்கு ஆங்கிலேயர் களின் ஆட்சி வந்தபோது, இவர்கள் அநேக இடங்களில் தங்கள் மத சம்மந்தமான சர்ச்சுகளை நிறுவினார்கள். இதன் மூலமாக நாம் அறிவது இதுதான். அதாவது எப்போது எந்த ஒரு விசயத்திற்கும், அரசு ஆதரவும், அங்கீகாரமும் கிடைக்கிறதோ, அப்போது அந்தக் காரியங்கள் எல்லாம் எளிதாகவே நடந்தேறுகின்றன.

இந்த சமயத்தில் யோகம் பற்றி பாரதத்தில் மட்டுமல்லாது. உலகம் முழுமையிலும் இதற்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது. அதாவது அதிகார அந்தஸ்து கிடைத்துள்ளது என்பதாகும். இப்போது நாம் கேள்விப்படுகிறோம். உலகிலுள்ள அனைத்து நாடுகளும் சேர்ந்து ஜூன் மாதம் 21ம் நாள் மிகப் பெரிய காரியத்திற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதற்கான திறப்பு விழாவை பாரதப் பிரதமர் திரு. நரேந்திரமோடி அவர்களை அழைக்கப் போவதாகவும், வெளிநாடுகளைச் சார்ந்த முக்கிய அமைச்சர்களை அழைக்கப் போவதாகவும் செய்தி அறிகிறோம். இதன் காரணமாக, உலகம் முழுவதும் யோகம் (தியானம்) பற்றிய விளம்பரமும், அனுபவமும் பிரசித்தம் ஆகும் என்பது நற்செய்தியாகும்.

ஆசிரியரும் பிரசுரிப்பவரும் பி.கு. அண்ணபூர்ணா, பிரஜாபிதா பிரம்மாகுமாரிகள் ஈஸ்வரிய விஷ்வ வித்யாலயம், சாந்திதாமம், பிளாட் எண்: 3702, Q-96, 3வது அவின்யு, அண்ணாநகர், சென்னை-40
அச்சிட்டோர் தா. தியாகேசன், தங்கேஷ் பிரிண்டர்ஸ், சென்னை-5 R.No.49463/87



**சென்னை:** வருடாந்திர கணக்கு வழக்கு சரி பார்க்கும் சேவைக்காக மதுபனிலிருந்து வந்திருந்த சகோதரர் பி.கு. லலித் மற்றும் சகோதர சகோதரிகள்



**சென்னை:** வருடாந்திர கணக்கு வழக்கு சரி பார்க்கும் நிகழ்ச்சிக்கு வந்திருந்த சகோதர சகோதரிகளுடன் உரையாடுகின்றார் பி.கு. லலித்




**சென்னை:** ஹேப்பி வில்லேஜில் பி.கு. இளைஞர்களுக்கான சிறப்பு நிகழ்ச்சியில் Tamilnadu BK Youth Forum னை துவக்கி வைப்பவர்கள்: பி.கு. கலாவதி, பி.கு. பீனா, பி.கு. தேவி, பி.கு. ரஞ்சனி மற்றும் மூத்த சகோதரர்கள்



**சென்னை:** பி.கு. இளைஞர்களுக்கான சிறப்பு நிகழ்ச்சியில் பங்கேற்ற பிரம்மா குமார் - குமாரிகள்



**சென்னை:** ஹேப்பி வில்லேஜில் நடைபெற்ற வருடாந்திர சேவை கூட்ட துவக்கவிழாவில் குத்து விளக்கு ஏற்றுபவர்கள் மூத்த சகோதரிகள்



**சென்னை:** வருடாந்திர கூட்டத்திற்கு வருகை தந்திருந்த சகோதர சகோதரிகள்




**கரூர்:** உலக மகளிர் தினத்தையொட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்ச்சியில் உரையாற்றுபவர் பி.கு. சாரதா உடன் Dr. விஜயா புஷ்பா, திருமதி மீனா, திருமதி பத்மாவதி



**கரூர்:** நிகழ்ச்சியில் கலந்து கொண்ட மகளிர்



**சென்னை:** ஹேப்பி வில்லேஜில் பள்ளி குழந்தைகளுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்ச்சியினை துவக்கி வைப்பவர்கள் மூத்த சகோதரிகள் மற்றும் நகர முக்கிய சகோதர சகோதரிகள்.



**சென்னை:** ஹேப்பி வில்லேஜில் பள்ளி குழந்தைகளுக்காக நிகழ்ச்சியில் பயிற்சியளித்த பி.கு சகோதரிகள். மற்றும் சேவையளித்த பி.கு சகோதர சகோதரிகள்.



**சென்னை:** பள்ளி குழந்தைகளுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட சிறுவர்கள் - மற்றும் சிறுமிகள் பகுதி



**சென்னை:** பள்ளி குழந்தைகளுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட குழந்தைகளின் ஒரு பகுதி




**மதுரை:** புதியதாக திறக்கப்பட்ட பெயர் பலகை (பிரம்மா புத்திரா தெரு) பி.கு. உமா, சுவாமிஜி, தபஸ்வி சரண்யாபிரகாஷ ஞான, சாந்தகிரி மற்றும் பி.கு. சகோதர சகோதரிகள்



**திருச்சி:** மாண்புமிகு மத்திய அமைச்சர் பொன். இராதா கிருஷ்ணன் அவர்களுக்கு நினைவு பரிசினை வழங்குகின்றார் பி.கு. தேவகி



சமுதாய ஆன்மீக கல்வி சேவைக்காக பி.கு. சுவாதி அவர்களுக்கு கௌரவ டாக்டர் பட்டம் பாண்டிச்சேரி முதல்வர் மாண்புமிகு திரு. ச. ரங்கசாமி அவர்களால் அளிக்கப்பட்டது.



**பாலக்காடு:** பள்ளி மாணவ மாணவிகளுக்கு இராஜயோக சிறப்பு பயிற்சி அளிக்கின்றார் பி.கு. சுரபி